# வருடாந்த அறிக்கை - 2017

## தேசிய ஆராய்ச்சி மன்றம்

தேசிய ஆராய்ச்சி மன்றம்
120/07, வித்தியா மாவத்தை, கொழும்பு - 07
தொலைபேசி. - +94112675176, +94112675430 தொலைமடல் - +94112675136
மின்-அஞ்சல். -nrc@sltnet.lkவலைக்கடபீடம். -www.nrc.gov.lk

# உள்ளடக்கம்

நோக்கும் பணியும்....2
குறிக்கோள்கள் ....3
செயற்பாடுகள் ....4
மன்றம்....5
பதவியணியினர்....6
தலைவரிடமிருந்தான செய்தி ....7
நிறைவேற்று செயலாளரின் அறிக்கை....8
கடந்த 3 வருடங்களில் நிதியியல் ரீதியாக முக்கியகுறிப்புக்கள் ....11
தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள் ....14
சிறப்பியல்புகள் – 2017 ....20
இலக்கை நோக்கிய பல்துறை ஆராய்ச்சி மானியங்கள் ....20
தேசிய ஆராய்ச்சி மன்ற முதலீட்டாளரை நோக்கிய ஆராய்ச்சி மானிய நிகழ்ச்சித்திட்டம்....28
விஞ்ஞான பிரசுரிப்புகளுக்கு ஜனாதிபதி விருதுகள் ....32
தனியார் அரச பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் ....35
ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள் ....37
வருடாந்த கணக்குகள் – 2017 ....42
கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை....43
தொடர்புகொள்வதற்கு தகவல்கள் ....44

# நோக்கும் பணியும்

## நோக்கு

"விஞ்ஞானம் மற்றும் அறிவினை அடிப்படையாகக்கொண்ட அபிவிருத்தியடைந்ததொரு நாட்டினது தகுநிலையினை சாதிப்பதற்கு இலங்கையை இயலச் செய்தல்"

## பணி

"விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்டு அபிவிருத்தியடைந்ததொரு நாட்டின் தகுநிலையினை சாதிப்பதற்கு அடிப்படை மற்றும் பிரயோக ஆராய்ச்சியினை மேம்படுத்துதல், நிதியீடு செய்தல் துணைமையாக இருத்தல் மற்றும் கண்காணித்தலுடன் இலங்கையின் மனித வளத்தை மேம்படுத்துதல்"

# குறிக்கோள்கள்

இலங்கை பாராளுமன்றத்தின் 2016 ஆம் ஆண்டின் 11 ஆம் கூட்டத்திற்கு அமைவுற தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் குறிக்கோள்கள் வருமாறு.

- அதி சிறப்பான விஞ்ஞான மற்றும் சமூகவியல் சமுதாயமொன்றினை நாட்டில் கட்டியெழுப்புவதற்காக, விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் தொடர்பிலான ஆராய்ச்சிகளை அரசாங்கம் முன்னெடுப்பதற்கு துணைமையாக இருத்தல்;

- தேசிய தேவைப்பாடுகளுக்கு பங்களிப்பு செய்யப்படுவதற்கு ஆதாரமாக இருக்கக்கூடிய ஆராய்ச்சியினை விருத்தி செய்வதற்காக உயர்கல்வியியல் நிறுவனங்கள், அரசதுறை ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவனங்களில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய ஆராய்ச்சியினை மேம்படுத்த துணைமையாக இருத்தல்; அத்துடன்

- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய ஆராய்ச்சியினை மேம்படுத்துவதில் தனியார் துறையினரின் கூட்டுறவினை கோருதல்.

# செயற்பாடுகள்

- மன்றத்தின் குறிக்கோள்களை சாதிக்கும் நோக்குடன் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சிகளை முன்னெடுப்பதற்கு மானியங்களை வழங்கல்;
- உயர்கல்வியியல் நிறுவனங்கள், அரசதுறை ஆராய்ச்சி நிறுவனங்கள், மற்றும் ஏனைய அரசதுறை நிறுவனங்கள் ஆகியவற்றிற்கு விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சிகளை முன்னெடுப்பதற்கு வழங்கப்பட்ட மானியமானது அவ்வாராய்ச்சிகளில் வினைத்திறனுடன் பயன்படுகின்றதா என கண்காணித்தல், மேற்பார்வை செய்தலுடன் இப்பணியில் கூட்டிணைவாக செயற்படல்;
- மன்றத்தின் நோக்கங்களுக்கு தேவைப்படும் ஆதனம், இயந்திரம் மற்றும் கருவிகளை இறக்குமதி செய்தல் மற்றும் மன்றம் சிறப்பாக முன்னெடுத்துச் செல்லப்படுவதற்கு கருவிகள், நிதியம் மற்றும் ஏனைய உதவிகள் அங்கீகரிக்கப்பட்ட உள்ளூர் மற்றும் வெளியூர் மூலகங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளல்;
- விஞ்ஞானம், தொழில்நுட்பவியல் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பிலுள்ள ஆராய்ச்சிகள் தொடர்பில் விடயங்களை சேகரித்தல் மற்றும் அவ்விடயங்களை அறிக்கைகள், சஞ்சிகைகள் அத்துடன் ஆவணங்களில் அச்சிடலும் பிரசுரித்தலும்;
- அக மற்றும் வெளியூரினை சார்ந்து விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியல் நிறுவனங்களில் விஞ்ஞான ஆய்வு மற்றும் விஞ்ஞான பணிக்காக புலமைப் பரிசில் மற்றும் இணையுரிமைகளை வழங்கல்;
- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பவியலுடன் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தினை இனம் காண்பதற்கான தேசிய முறைமை ஒன்றினை விருத்தி செய்தல் மற்றும் மானியங்களை வழங்கல்; அத்துடன்
- விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பம் மற்றும் அதனுடன் தொடர்புடைய விடயங்கள் தொடர்பிலான ஆராய்ச்சிகள் பற்றி விரிவுரைகள், கருத்தரங்குகள் மற்றும் பயிற்சிப்பட்டறைகளை நடாத்துதல்.

# மன்றம்

## தலைவர்

1. அதிமதிப்பிற்குரிய பேராசிரியர். ஹிதானதுர ஜானக டி. சில்வா

## ஏனைய உறுப்பினர்கள்

2. பேராசிரியர். உபாலி அமரசிங்க
3. பேராசிரியர். வீரதுங்க ஆராச்சிகே ஜனேந்திரே மதலி டிகொஸ்டா
4. பேராசிரியர். விரஜ்சித் பிரியான் சொலமன் டயஸ்
5. பேராசிரியர். லக்க்ஷ்மன் திஸ்ஸநாயக
6. பேராசிரியர். வெரன்ஜா கருணாரட்ன
7. பேராசிரியர். காமினி நிர்மலா மென்டிஸ்
8. எந்திரி. மொக்சேவி பெரலிஸ்
9. கலாநிதி. கல்படா ஆராச்சிகே சிறிமல் பிரேமகுமார
10. பேராசிரியர். அருணி திலகரட்ண

## விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சினது பிரதிநிதி

11. திருமதி. ஹிமாலி அத்தஉடகே

## திறைசேரி பிரதிநிதி

12. திரு. ஈ. ஏ. ரத்னசீலா

# பதவியணியினர்

| | |
|---|---|
| நிறைவேற்று செயலாளர் | எம். சி. ராஜபக்ஷ |
| கணக்காளர் | என். எஸ். ஹேவாகம |
| விஞ்ஞான அலுவலர் | பி. கே. ஏ. எஸ். ஆர் நோனிஸ் |
| விஞ்ஞான அலுவலர் | என். கே. திசாநாயக்க |
| விஞ்ஞான அலுவலர் | டபிள்யு. கெ. என். ஹன்சானா |
| விஞ்ஞான அலுவலர் | எஸ். எஸ். கட்டுகம்பல |
| கணக்கியல் அலுவலர் | ஏ. கே. டி. எம். பெரேரா |
| உதவிக் கணக்காளர் | ஏ. ஈ. கே. தயாரத்ண |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | சி. மதுமானி |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | எஸ். எச். எஸ். பிரியங்கர |
| நிகழ்ச்சித்திட்ட உதவியாளர் | ரி. மதுசானி |
| சாரதி | கெ.கெ.டி. சந்தருவன் |
| சாரதி | எஸ். பிரேமகுமார |

2017.12.31 இல் உள்ளவாறாக.

# தலைவரிடமிருந்தான செய்தி

இலங்கை தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் 2017 ஆம் ஆண்டிற்குரிய வருடாந்த அறிக்கையை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிப்பதில் நான் மகிழ்ச்சியடைகின்றேன். தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் பிரதான செயற்பாடுகள் எனப்படும்போது அதற்குள் ஆராய்ச்சி பிரேரணைகளுக்கு அழைப்புவிடுத்தல், மதிப்பீடு செய்தல் மற்றும் நிதியீடு செய்தல் என்பனவற்றுடன் தேசிய அங்கீகார முறைகளினை விருத்திசெய்தல், இலங்கை விஞ்ஞானிகளின் வெற்றியீட்டிய ஆராய்ச்சிகளுக்கும் புதிது கண்டுபிடித்தலுக்கும் விருதுகளை வழங்கல் என்பனவும் உள்ளடங்கும்.

2016 ஆம் ஆண்டில் பாராளுமன்ற சட்டத்தினூடாக தேசிய ஆராய்ச்சி மன்றமானது ஒரு நியதிச்சட்ட அமைப்பாக தாபிக்கப்பட்டதுடன் தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் நிரந்தர தொழில்நிலைப் பிரிவுக்குள் பதவியணியினரை உள்ளீர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. அரச தனியார் பங்குடமை நிகழ்ச்சித் திட்டத்திற்கு நாம் தொடர்ந்தும் நிதியீடு செய்துவருகிறோம் என்பதுடன் 2017 ஆம் ஆண்டில் இரண்டு புதிய கருத்திட்டங்களுக்கு நாம் நிதியீடு செய்தோம். தேசிய ஆராய்ச்சி மன்றமானது புதிது புனைதலிற்கான ஆராய்ச்சி கருத்திட்டங்களிற்காக முதலீட்டாளரை நோக்கிய ஆராய்ச்சி மானியங்கள் 32 இனை வழங்கியுள்ளது.

விஞ்ஞான பிரசுரிப்புகளுக்கான ஜனாதிபதியின் விருது வழங்கல் வைபவமானது இந்த வருடம் நவம்பர் மாதம் இடம்பெற்றது. இவ் விழாவில் அதிமேதகு ஜனாதிபதி அவர்கள் பிரதம விருந்தினராகவும் விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் இராஜாங்க அமைச்சர் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொண்டு விழாவை சிறப்பித்தனர். இதன்போது 295 விஞ்ஞானிகளுக்கு 2015 ஆம் ஆண்டு பிரசுரிக்கப்பட்ட அவர்களின் பிரசுரிப்புகள் கருத்திற்கொள்ளப்பட்டு அதன் அடிப்படையில் விருதுகள் வழங்கப்பட்டது. மேலும் 503 விஞ்ஞானிகளுக்கு அவர்களின் பிரசுரிப்புகளுக்கு தேசிய விஞ்ஞான மன்றத்தின் புதிய 'மெரிட்' விருதுகளும் மற்றும் இளம் விஞ்ஞானிகளை ஊக்குவிக்கும் முகமாக 2 ஆம் மட்டத்திலான விருதுகளும் வழங்கப்பட்டன.

இறுதியாக இலங்கை தேசிய ஆராய்ச்சி மன்றத்திற்கு தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் அமைச்சரினாலும் மற்றும் அவ் அமைச்சின் செயலாளரினாலும் வழங்கப்பட்ட மதிப்பீடு செய்யமுடியாத உறுதுணை மற்றும் ஊக்குவிப்பு ஆகியவற்றிற்கு விசேட நன்றிகளை தெரிவிக்க நான் விரும்புகின்றேன்.

**வித்தியாசயோதி பேராசிரியர் எச். ஜானக டி சில்வா**
தலைவர்.

# நிறைவேற்று செயலாளரின் அறிக்கை

2017 ஆம் ஆண்டுக்குரிய வருடாந்த அறிக்கையில் எனது செய்தியை முன்வைப்பதில் நான் பெருமையடைகிறேன். இந்த அறிக்கையானது 2017 ஆம் ஆண்டில் நிறுவகத்தின் செயற்பாடுகளைப் பற்றிய தெளிவான விளக்கத்தை தரும் என நான் எதிர்பார்க்கிறேன். தேசிய ஆராய்ச்சி மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்ட நடவடிக்கைகள் பற்றிய விளக்கத்தை இந்த அறிக்கை தருவதினால் இந்த ஆண்டறிக்கையானது ஒரு முக்கியமான இடத்தை வகிக்கின்றது.

2016 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க சட்டத்தில் தரப்பட்டவாறு தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் குறிக்கோள்களாவன, நாட்டில் விஞ்ஞானத்திலும் தொழில்நுட்பவியலிலும் ஒளிர்வு மிகு ஒரு சமுதாயத்தை கட்டியெழுப்புவதற்கு விஞ்ஞானத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சிகளில் அரசிற்கு துணைமையாக இருத்தல், உயர்கல்வி நிறுவனங்கள், அரசதுறைசார் ஆராய்ச்சி நிறுவனங்கள் மற்றும் ஏனைய அரச நிறுவகங்களில் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சிகளை மேம்படுத்தலும் அதற்கு உதவியாக இருப்பதனூடாக தேசிய தேவைகளுக்கு பங்களிப்பு செய்யும்வகையில் ஆராய்ச்சி சார்ந்த ஒரு அடிப்படையினை விருத்தி செய்தல் மற்றும் விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சிகளினை மேம்படுத்துவதில் தனியார் துறையினரின் கூட்டுழைப்பினை கோருதல் என்பனவாகும்.

தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் பிரதான செயற்பாடானது, விஞ்ஞான ஆராய்ச்சியில், ஆராய்ச்சி அபிவிருத்தி செயற்பாட்டுடன் தொடர்புடைய நிறுவனங்களின் ஆராய்ச்சிகளில் மற்றும் உயர்கல்வி நிறுவனங்களில் ஆராய்ச்சிகளில் ஈடுபட்டுள்ள ஆராய்ச்சியாளர்களுக்கு ஒரு தேசிய முறைமையை வகுப்பதனூடாக விஞ்ஞானம் மற்றும் தொழில்நுட்பத்துடன் தொடர்புடைய ஆராய்ச்சி மற்றும் புத்தாக்கத்தை விருத்தி செய்வதற்கான மானியங்களை வழங்கல் ஆகும்.

இந்த முக்கியமான குறிக்கோள்களை சாதிப்பதற்கு தேசிய ஆராய்ச்சி மன்றமானது 2017 ஆம் ஆண்டு வருடகாலப் பகுதியில் பின்வரும் நிகழ்ச்சித்திட்டங்களை முன்னெடுத்தது. அவையாவன முதலீட்டாளரை நோக்கிய ஆராய்ச்சி மானிய நிகழ்ச்சித்திட்டம், தனியார் – அரச பங்குடமை நிகழ்ச்சித்திட்டம், இலக்கை நோக்கிய பல்துறை ஆராய்ச்சி மானிய நிகழ்ச்சித்திட்டம், விஞ்ஞான பிரசுரிப்புக்களுக்கான ஜனாதிபதி விருதுகள், எல்லைக்கடந்த நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பொதுமக்கள் விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் என்பனவாகும்.

முதலீட்டாளரை நோக்கிய ஆராய்ச்சி மானிய (ID) நிகழ்ச்சித்திட்டமானது, 1999 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதுடன் இது ஒரு போட்டிக்குரிய மானிய திட்டமாகும் என்பதுடன் இந்த நிகழ்ச்சித்திட்டமானது ஆராய்ச்சியாளர்கள் ஆராய்ச்சியினை முன்னெடுப்பதற்கு ஆகக்குறைந்த நிர்வாக செயன்முறைகளை வழங்கி அவர்களுக்கு

துணைமை செய்கிறது. 2017 ஆம் ஆண்டு வருடகாலப் பகுதியில் 105 விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற்றதுடன் அவற்றில் 32 நிதியீடு செய்யப்பட்டதுடன் இதில் பட்டப்பின் படிப்பு இணையுரிமைகள் 27 ஆகும். வருடகாலப் பகுதியில் 150 மானியங்களுக்கும் மேல் செயற்பாட்டில் உள்ளது. 17 மானியங்களுடனும் 23 விஞ்ஞான சுட்டிலக்க சஞ்சிகை (SCIE) பிரசுரிப்புக்களுடனும் பூரணப்படுத்தப்பட்டதுடன் 15 பட்டப்பின் படிப்பாளர்கள் அவர்களின் பட்டங்களை பெற்றுக்கொண்டதுடன் (07 பி.எச்.டி மற்றும் 08 எம்பில்கள்) 73 சர்வதேச மாநாடுகளில் ஆராய்ச்சி தேடல்களாவன பிரசித்தி படுத்தப்பட்டன.

2012 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட தனியார் அரச பங்குடமை (PPP) நிகழ்ச்சித்திட்டமானது அரச துறை ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்களிடம் மற்றும் பல்கலைக்கழகங்களிலும் இருக்கின்ற விஞ்ஞானிகளுக்கும் மற்றும் தனியார் துறையிலிருக்கின்ற விஞ்ஞானிகளுக்கும் இடையில் பங்குடைமைகளை முன்னெடுப்பதற்கு ஆதாரமாக இருக்கின்றது. இந்தக் கருத்திட்டங்களாவன ஆராய்ச்சிகள் முன்னெடுக்கப்படவேண்டிய பரப்பெல்லைகளையும் மற்றும் அவற்றுக்குள்ள வர்த்தக ரீதியிலான வாய்ப்புக்களையும் தெளிவாக இனம் காண்கின்றது. இக் கருத்திட்டங்கள் அவற்றின் செயற்பாடுகளை இவ்வருடம் பூர்த்தி செய்தன. வருடகாலப்பகுதியில் புதிதாக ஆர்வத்தை வெளிப்படுத்துவதற்கு (EOT) அழைப்பு விடுக்கப்பட்டதுடன் அவற்றில் 10 EOT பெற்றுகொள்ளப்பட்டு மதிப்பீடு செய்யப்பட்டு அவற்றின் இரண்டு நிதியீடு நிமித்தம் தெரிவு செய்யப்பட்டதுடன் வருடகாலப்பகுதியில் அவற்றில் ஒன்றுக்கும் அத்துடன் 2016 ஆம் ஆண்டிலிருந்து ஒன்றுக்கும் நிதியீடு செய்யப்பட்டது. மொத்தமாக 08 அரச தனியார் பங்குடமை (PPP) கருத்திட்டங்கள் செயற்பாட்டில் உள்ளன.

2013 ஆம் ஆண்டில், மிகத் தீவிரமான தேசிய ரீதியிலமைந்த சிக்கல்களுக்கு ஆராய்ச்சி அபிவிருத்தி இடைவினைகளினூடாக நீண்ட கால ரீதியில் தீர்வுகளை தேடுவதற்கு இலக்கை நோக்கிய பல்துறை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டது. உயர்ந்த தரமான திரவியங்களை பாவித்து நீரை தூய்மையாக்கல் செய்வதற்கான ஒரு நீர் தூய்மையாக்கி ஒன்றை விருத்தி செய்தல் என்ற கருத்திட்டத்திற்கான பிரேரணையானது 2016 ஆம் ஆண்டில் தெரிவு செய்யப்பட்டு அதற்கு நிதியீடு செய்யப்பட்டது. நடைமுறையிலிருக்கும் ஐந்து கருத்திட்டங்களை மதிப்பீடு செய்து கண்காணித்தல் தொடர்பில் முன்னேற்ற மீளாய்வு கூட்டமானது வருடகாலப் பகுதியில் இடம்பெற்றது.

2018 ஆம் ஆண்டிற்கு செல்லுபடியாகும் வகையில் மூன்று மானிய திட்டங்களின் கீழும் விண்ணப்பங்களுக்கு அழைப்பு விடுத்தல் என்ற புதிய செயன்முறையானது தொடங்கப்பட்டதுடன் இவ் விண்ணப்பங்களாவன 2017 ஆம் ஆண்டு செப்டெம்பர் மற்றும் ஒக்டோபர் மாதம் பெற்றுக்கொள்ளப்பட தீர்மானிக்கப்பட்டது. இந்த முறை மூலம் இந்த விண்ணப்பங்களை மதிப்பீடு செய்ய அதிக காலம் கிடைக்கும்.

தமது ஆராய்ச்சியில் சர்வதேச தரத்தினையடைந்து வெற்றியீட்டிய விஞ்ஞானிகளுக்கான அங்கீகாரத்தை அதிகரித்தல் வேண்டும் என்ற கருத்தை பிரதானமாக கொணடே விஞ்ஞான பிரசுரிப்புக்களுக்கான ஜனாதிபதி விருதுகள் (PASP) முறைவடிவமாக்கம் செய்யப்பட்டுள்ளது தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் வருடாந்த நிகழ்வுகளில் ஒன்றாக இந்த PASP நிகழ்வு கருதப்படுவதுடன் இது நவம்பர் மாதம் வரும் விஞ்ஞான தினத்தில் ஒன்றினைந்த வகையில் முன்னெடுக்கப்படும், 2015 ஆம் அண்டிற்குரிய இந்த விருது வழங்கல் வைபவமானது 2017 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 06 ஆம் திகதி இடம் பெற்றதுடன் விழாவினை அதி மேதகு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அவர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தார். 295 விஞ்ஞானிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன.

“பொலிதீனை நிலையானதொரு முறையில் முகாமைத்துவம் செய்தல்” எனும் தலைப்பில் ஒரு எல்லை கடந்த நிகழ்ச்சித்திட்டமானது 2017 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்பட்டது. வடமத்திய மாகாணத்திலிருந்து 800 பள்ளிக்கூடங்கள் பங்குபற்றின.

பெறுமதி மிகு ஆராய்ச்சி தேடல்கள் பற்றி பொது மக்கள் அறிந்து கொள்வதற்கு, புதினப்பத்திரிகை ஆக்கங்கள் 40 மேல் பிரசுரிக்கப்பட்டன.

நாட்டு மக்களுக்கு அதிக அறிவையும் நன்மையினையும் தரக்கூடிய வகையில் தேசிய ஆராய்ச்சி மன்றமானது எப்போதும் சகல துறைகளினையும் சார்ந்த உயர்தரமான ஆராய்ச்சிகளுக்கு நிதியீடு செய்கிறது.

தேசிய ஆராய்ச்சி மன்றத்தினை இவ் வருடம் இந்த நிலைக்கு கொண்டு வருவதற்கு மதிப்பிட முடியாத தமது பங்களிப்பினை வழங்கிய தலைவர், மன்ற உறுப்பனர்கள், திறைசேரி அலுவலர்கள் மற்றும் விஞ்ஞான தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சிற்கும் எனது மனமார்ந்த நன்றியை தெரிவித்து கொள்கின்றேன். வருடம் முழுவதிலும் எள்ள்வும் பிசகாது தமது ஆதரவினை மன்றத்தின் வளர்ச்சிக்கு வழங்கிய பதயணியினருக்கு நான் எனது நன்றியை தெரிவிக்க கடமைபட்டுள்ளேன்.

**மனிஷா சி. இராஜபக்ச**
*நிறைவேற்று செயலாளர்*

# கடந்த 3 வருடங்களில் நிதியியல் ரீதியாக முக்கியகுறிப்புக்கள்

| நிகழ்ச்சித்திட்டங்கள் (திறமுறைகள்) | | பௌதீகவியல் வளர்ச்சி | | | நிதியியல் வளர்ச்சி ரூபாய் மில்லியன் | | |
|---|---|---|---|---|---|---|---|
| | சுட்டி | 2015 | 2016 | 2017 | 2015 | 2016 | 2017 |
| தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் பொது நிர்வாகம் | | | | | 16.85 | 17.60 | 20.99 |
| கீழ் குறிப்பிடப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்களுக்கான அபிவிருத்தி உதவிகள் | | | | | 268.52 | 230.00 | 178.63 |
| இலக்கை நோக்கிய பல்துறை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்கள் (2014 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது) | நிகழ்ச்சித்திட்டங் களின் எண்ணிக்கை | | 2 நிகழ்ச்சித்திட்டங்கள் தொடங்கப்பட்டன. | | | | |
| தனியார் அரச பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம் (2013 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது) | நிகழ்ச்சித்திட்டங் களின் எண்ணிக்கை | 1 நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது. | 3 நிகழ்ச்சித்திட்டங்கள் தொடங்கப்பட்டன.<br>2 உற்பத்திகள் அறிமுகப்படுத்துகை செய்யப்பட்டது. | 2 நிகழ்ச்சித்திட்டங்கள் தொடங்கப்பட்டன. | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| முதலீட்டாளரை நோக்கிய ஆராய்ச்சி மானியத்திட்டம்<br><br>(1999 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது.) | வழங்கப்பட்ட ஆராய்ச்சி மானியங்களின் எண்ணிக்கை | முதலீட்டாளரை நோக்கிய ஆராய்ச்சி மானியங்கள் 61 வழங்கப்பட்டன. | முதலீட்டாளரை நோக்கிய ஆராய்ச்சி மானியங்கள் 34 வழங்கப்பட்டன. | முதலீட்டாளரை நோக்கிய ஆராய்ச்சி மானியங்கள் 32 வழங்கப்பட்டன. | - | - | - |
| | வழங்கப்பட்ட பி.எச்.டி / எம்.பில் இணையுரிமை களின் எண்ணிக்கை | 46 பி.எச்.டி / எம்.பில் இணையுரிமைகள் வழங்கப்பட்டன. | 19 பி.எச்.டி / எம்.பில் இணையுரிமைகள் வழங்கப்பட்டன. | 27 பி.எச்.டி / எம்.பில் இணையுரிமைகள் வழங்கப்பட்டன. | | | |
| | | | | | | | |
| விஞ்ஞான பிரசுரிப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கு சனாதிபதி விருது (PASP)<br><br>(2001 ஆம் ஆண்டில் நிகழ்ச்சித் திட்டம் தொடங்கப்பட்டது.) | இடம்பெற்ற விழாக்களும் விருது வழங்கப்பட்ட விஞ்ஞானிகளின் எண்ணிக்கையும் | 2013 ஆம் ஆண்டுக்குரிய PASP விழா இடம்பெற்றதுடன், 211 விஞ்ஞானிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. விழா பூரணப் படுத்தப்பட்டது. | . 2014 ஆம் ஆண்டுக்குரிய PASP விழா இடம்பெற்றதுடன் 232 விஞ்ஞானிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. | 2015 ஆம் ஆண்டுக்குரிய PASP விழா இடம்பெற்றதுடன் 295 விஞ்ஞானிகளுக்கு விருதுகள் வழங்கப்பட்டன. | - | - | - |
| | | | | | | | |

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்: எல்லை கடந்த/பொது விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித் திட்டங்கள் | பூரணப்படுத்தப்பட்ட நடவடிக்கைகள் | 4 எல்லை கடந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.<br><br>தேசிய ஆராய்ச்சி மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகள் தொடர்பில் 11 புதினப்பத்திரிகை ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டன. | 4 எல்லை கடந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.<br><br>தேசிய ஆராய்ச்சி மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகள் தொடர்பில் 50 புதினப்பத்திரிகை ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டன. | 6 எல்லை கடந்த நிகழ்ச்சித்திட்டங்கள் நடாத்தப்பட்டன.<br><br>தேசிய ஆராய்ச்சி மன்றத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆராய்ச்சிகள் தொடர்பில் 40 புதினப்பத்திரிகை ஆக்கங்கள் பிரசுரிக்கப்பட்டன. | - | - | - |
| மொத்தம் | | | | | 285.37 | 247.60 | 199.62 |

# தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் நிகழ்ச்சித்திட்டங்கள்

**<u>இலக்கை நோக்கிய பல்துறை பேரின ஆராய்ச்சி மானியம்</u>**

ஒரு விடயத்தை பற்றி மட்டுமேயான ஆராய்ச்சியானது, மிகவும் அரிதாகவே அந்த விடயத்தை பற்றிய புரிந்துணர்வை மேம்படுத்தவும் அதுபோன்று கூட்டிணை பிரச்சினைகளை சிறந்த முறையில் தீர்த்து வைப்பதற்கும் உதவுவதாக அமைகின்றது. ஆனால் ஒரு பல்துறை அணுகுமுறை எனப்படும்போது, அது வழமையான வரையறைகளைத் தாண்டி பிரச்சினைகளை மீள்நோக்கல் செய்வதுடன் பல்துறை சார் முறைகள் மற்றும் கடினமான சிக்கல்கள் தொடர்பில் ஒரு புதிய புரிந்துணர்வை ஏற்படுத்தி அதன் அடிப்படையில் தீர்வைக் காண்பதற்கு முற்படும்.

ஆராய்ச்சி அபிவிருத்தி தலையீடுகள் உடனடியாக தேவைப்படுகின்ற பத்து முக்கிய பரப்பெல்லைகளை பிரேரணை செய்த தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சுடன் ஒருங்கிணைந்த வகையில் 2013 ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டது.

அரச விஞ்ஞான ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி அமைப்பாண்மைகள் மற்றும் பல்கலைக்கழகங்களை சார்ந்த ஆராய்ச்சியாளர்கள் குழாமிடமிருந்து முன்பிரேரணைகளுக்கு அழைப்புவிடுக்கப்பட்டது. நாட்டின் பொருளாதார அபிவிருத்தி, சமூக நலன்புரி மற்றும் சூழல்நிலைபெறு தகைமை ஆகியவற்றை இலக்கு செய்கின்ற தேசிய முக்கியத்துவம் வாய்ந்த சிக்கல்களை தீர்த்து வைத்தலே இலக்கை நோக்கிய பல்துறை ஆராய்ச்சி நிகழ்ச்சித்திட்டங்களின் நோக்காகும்.

இந்த கருத்திட்டங்களின் பிரதான இலக்கானது கொள்கை / திறமுறை அல்லது உற்பத்தி அபிவிருத்திக்கான அறிவு, பிரச்சினைகளை வேகமாக தீர்த்து வைத்தல் மற்றும் தேசம் முகம்கொடுக்கும் சவால்கள் என்பனவற்றிலுள்ள பிரதான இடைவெளிகளை விளித்தல் ஆகும். ஆராய்ச்சி விளைவளவுகளாவன கொள்கைகள், திறமுறைகள், உற்பத்தி / செயன்முறை அபிவிருத்தி மற்றும் அவற்றின் மேம்படுத்துகை என்பனவற்றிற்கு மாற்றீடு செய்யப்படவேண்டிய பாதையானது தெளிவாக இனம்காணப்படல் வேண்டும்.

தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் தேசிய ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி கொள்கை அறிக்கையுடன் (பத்து முக்கிய பரப்பெல்லைகள்) ஒருங்கிணைந்த வகையில் பல முக்கிய பரப்பெல்லைகளுடன் தொடர்புற்ற வகையில் பிரேரணைகளுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இவ்விடயம் தொடர்பில் வழங்கப்படக்கூடிய மானியத்தின் பெறுமதி ரூபாய் 50 மில்லியன். காலவரையரை 5 வருடங்களுக்கும் மேல் என்பதாகும். தேசிய ஆராய்ச்சி மன்றமானது இந்த கருத்திட்டங்களில் அரசின் பணம் என்ற வகையில் ஒரு கணிசமான அளவு தொகையை முதலீடு செய்வதால் அந்த நிதியீடானது உயர் போட்டி அடிப்படையில் அமைந்ததொரு நிதியீடாக அமையும். ஐந்து வருட காலங்களில்

உணரத்தக்கதொரு விளைவுகளைத் தரக்கூடியதாய் கருதப்பட்டு தேசிய ஆராய்ச்சி மன்றத்தினால் தெரிவுசெய்யப்படும் கருத்திட்டங்களுடன் இணைந்த வகையில் செயலாற்றுவதற்கு மிகவும் பொருத்தமுடைய மற்றும் செயல் வல்லமை திறனைக் கொண்ட ஆராய்ச்சியாளர்களை தேசிய ஆராய்ச்சி மன்றம் தெரிவுசெய்யும். ஆராய்ச்சியின் வேறுபட்ட துறைகளுக்கு ஒன்றிணைந்த வகையில் பணியாற்றக்கூடிய குழு உறுப்பினர்களைக் கொண்டிருத்தலானது இந்த பல்மைய கருத்திட்டங்களுக்கு கிடைக்கப்பெற்றுள்ள அனுகூலமாகும்.

மானியத்தின் தொழிற்பாட்டு கோணங்களாவன முதலீட்டாளர்களை நோக்கிய மானியங்களுடன் ஒத்துப்போகின்றது. எவ்வாறாயினும், முதன்மை முதலீட்டாளர்களுடன் ஒரு பிரதி தலைவர் நியமனம் செய்யப்படுவார். மானியம் வழங்கப்பட்டவுடன் இக்கருத்திட்டங்களிலிருந்து கூறப்பட்ட விளைவளவுகளாவன சாதிக்கப்படுகின்றதா என்பதை நிச்சயம் செய்துகொள்வதற்கு இக்கருத்திட்டங்கள் மீது ஒரு ஒழுங்குமுறையான அத்துடன் கடுமையான நுண்ணாய்வு, கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படும்.

## <u>முதலீட்டாளரை நோக்கிய ஆராய்ச்சி மானிய திட்டம்</u>

அரச நிறுவனங்களிலிருந்தான நிதியங்கள், போட்டிக்குரிய மானியங்கள் மற்றும் ஆராய்ச்சி ஒப்பந்தங்கள் போன்ற வேறுபட்ட மூலகங்களின் மூலம் இலங்கையில் ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகள் நிதியீடு செய்யப்படும் என்பதுடன் இவை பிரதானமாக அரச நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களினால் முன்னெடுக்கப்படுகின்றது. விஞ்ஞானிகள் அதிகுறைந்த அதிகாரத்துடன் ஆராய்ச்சிகளை முன்னெடுப்பதற்கே தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் ஆராய்ச்சி மானிய நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட்டது.

அரச நிர்வகங்களுக்கு ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு போட்டிக்குரிய மானியங்களை தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் ஆராய்ச்சி மானிய நிகழ்ச்சித் திட்டம் வழங்குகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் அமுல்படுத்தப்பட தொடங்கப்பட்ட காலத்திலிருந்தே இன்றுவரை இந்நிகழ்ச்சித்திட்டமானது தொடர்ச்சியாக நுண்ணாய்வு செய்யப்படுவதினால் தற்போது இது அதிகளவில் குறை நிறைகள் திருத்தப்பட்டதொரு நிகழ்ச்சித்திட்டமாகவுள்ளது. மானியங்களாவன வருடாந்தம் விளம்பரப் படுத்தப்படுவதுடன், விஞ்ஞானவியல்துறைசார் விடயங்களாவன தேசிய அபிவிருத்தியுடன் தொடர்புடையது என்ற விடயம் கருத்திற்கொள்ளப்பட்டு அவற்றின் அடிப்படையில் மதிப்பீடுகள் மேற்கொள்ளப்படுவதுடன் ஆராய்ச்சியின் முடிவில் பெறப்படும் தேடல்களாவன சர்வதேச சஞ்சிகைகளில் பிரசுரிக்கப்பட்டு வருகின்றது.

விண்ணப்பங்களாவன கடுமையான மதிப்பீட்டு செயன்முறைக்குட்படுத்தப்படும். தெரிவுசெய்யப்பட்ட பிரேரணை தொடர்பில் ஏற்புடைய ஒதுக்கீட்டு நிதியமானது மன்றத்தினால் தீர்மானிக்கப்படும் என்பதுடன், கருத்திட்டத்தின் செயற்படுத்துகைக்கு தனிப்பொறுப்பாகவுள்ள முதன்மை முதலீட்டாளருக்கு மன்றத்தினால் தீர்மானிக்கப்பட்ட இந்த ஒதுக்கீட்டு நிதியமானது திறைசேரியினூடாக நேரடியாக வழங்கப்படும். நிதிய ஒதுக்கீடு எனப்படும்போது கருவிகள், நுகர்வுகள் இதர விடயங்கள் கருத்திற்கொள்ளப்படும். ஒவ்வொரு கருத்திட்டம் தொடர்பிலும் கருத்திட்ட வங்கிக்கணக்கு திறக்கப்படும் என்பதுடன் அதில் இடம்பெறும் சகல கொடுக்கல் வாங்கல்களும் தேசிய ஆராய்ச்சி மன்றத்தினால் கண்காணிக்கப்படும். இந்த செயன்முறையானது விஞ்ஞானிகளைப் பொறுத்தவரையில் அவர்களின் கருத்திட்ட தேவைப்பாடுகளுக்கு நிதியத்தை பாவனை செய்வது தொடர்பில் கணிசமான அளவு நெகிழ்வுத்தன்மையை அதிகூடிய கண்காணிப்பின் கீழ் வழங்குவதாக அமைகின்றது. கண்காணிப்பு மற்றும் மதிப்பீடுகளாவன மன்றத்தினாலும் தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் செயலகத்தினாலும் முன்னெடுக்கப்படும்.

தற்போது வழங்கப்படும் மானிய வகைகளாவன அவற்றின் தன்மையினைப் பொருத்து பல்வகைமையாய் அமைகின்றது என்பதை இங்கு குறிப்பிடல் வேண்டும். தூய விஞ்ஞான தலைப்புக்கள் மற்றும் உணவு, நீர், சூழல் மற்றும் சக்தி ஆகியவை தொடர்பிலான ஆராய்ச்சிகளில் நிதியீடு செய்வதிலும் பார்க்க தேசிய ஆராய்ச்சி மன்றமானது தற்போது தேசிய ரீதியில் முக்கியத்துவம் வாய்ந்த விடயங்கள், நீர்பாசன முறைமை, வனவிலங்குகள் மற்றும் சூழல் சுற்றுலாத்துறை, உரை மொழிபெயர்ப்பு, நிர்மாணம் மற்றும் கட்டிடக்கலை, புகையிரத நெரிசல், விளையாட்டுத்துறை மற்றும் ஏனைய பலதுறைகளில் நிதியீடு செய்யத் தொடங்கியுள்ளது.

சகல நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பிலும் எளிமையான ஆனால் விரிவான விண்ணப்பமானது பூரணப்படுத்தப்படல் வேண்டும். கடந்த வருடகாலத்துடன் ஒப்பிட்டுப் பார்க்கையில் தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் இவ்விடயங்கள் தொடர்பில் கிடைக்கப்பெறுகின்ற மானியங்களின் எண்ணிக்கை வருடத்திற்கு வருடம் அதிகரித்து செல்லலை அவதானிக்கும்போது அது தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் செயற்பாடுகளில் ஒரு சாதக சமிக்ஞையை காட்டுகின்றது. இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் எமக்குக் கிடைக்கப்பெற்றுள்ள நம்பிக்கையினை தக்க வைத்துக்கொள்ளுதலே இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடர்பில் நாம் முகம்கொடுக்கும் சவாலாகும்.

இந்த நிகழ்ச்சித்திட்டம் மூலம் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக்கொள்வதற்கு இந்த மானியங்களின் வளர்ச்சியினை கண்காணிப்பதற்கும் மதிப்பீடு செய்வதற்கும் அநேக ஒழுங்குவிதிகள் மற்றும் வழிகாட்டல்கள் மன்றத்தினால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளன.

## விஞ்ஞான பிரசுரிப்புக்களுக்கு சனாதிபதி விருதுகள்

சர்வதேச தரத்தை அடைய முற்படும் விஞ்ஞானிகளை கௌரவிக்கும் முகமாகவும் அத்துடன் தேசிய விஞ்ஞான உற்பத்தித் திறனை அதிகரிக்கும் முகமாகவும் 2001 ஆம் ஆண்டு இந்த நிகழ்ச்சித்திட்டம் தொடங்கப்பட்டது. 1991 ஆம் ஆண்டிலிருந்து இன்றுவரையிலுமுள்ள பிரசுரிப்புக்களில், காணப்படும் ஆராய்ச்சியாளர்களின் விளைவளவுகள் பற்றிய தேசிய புள்ளிவிபரவியலின் மூலம் தெரியப்படுத்தப்படும் தகவல்களாவன ஆராய்ச்சி திறன்களின் வளர்ச்சிக்கு சான்றாக அமைகின்றது.

முழுத்திட்டமும் விஞ்ஞான குறிப்பு சுட்டிலக்க விரிவாக்கத்தை (SCIE) சார்ந்ததாய் உள்ளது. உலக விஞ்ஞான பருவ சஞ்சிகைகளின் மிக சிறந்த சஞ்சிகைகளாக தெரிவுசெய்யப்பட்ட சஞ்சிகைகள் இந்த SCIE தரவுதளத்தில் உள்ளடங்கியுள்ளது. மேலும் SCIE ஆனது ஒரு வருடத்தில் 14000 சஞ்சிகைகளை பகுப்பாய்வு செய்கிறது.

விஞ்ஞானி ஆராய்ச்சி விருதினை பெறும்பொருட்டு தொகுக்கப்பட்ட தொகுப்பானது விஞ்ஞானம் தொடர்பிலிருக்கின்ற “கடினமான விஞ்ஞான விடயங்கள்” பற்றிய தலைப்புக்களை உள்ளடக்கியதாய் இருக்கின்ற அதேவேளையில், (சமூக விஞ்ஞானம் விடயம் தவிர்ந்த) SCIE இல் தரப்பட்டவாறு ஒரு இலங்கையினரின் விலாசத்தினை கொண்டவராக இருத்தல் வேண்டும்.

2017 ஆம் ஆண்டில் இரண்டு நிகழ்ச்சித்திட்டங்கள் இடம்பெற்றதுடன் இதன்போது 195 இற்கும் அதிகமான விஞ்ஞானிகள் 2014 ஆம் ஆண்டு வரையுள்ள சுட்டிலக்க பிரசுரிப்புக்கள் வெளியிடப்பட்ட அவர்களின் ஆக்கங்களுக்கு விருதினைப் பெற்றனர்.

## அரச தனியார் பங்குடைமை நிகழ்ச்சித்திட்டம்

விஞ்ஞானம், தொழில்நுட்பவியலில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தியில் முன்னேற்றத்தை அடைவதன் மூலம் உலகளாவிய சந்தையில் போட்டியிடும் உற்பத்திகள் மற்றும் சேவைகளின் பெறுமானத்தை அதிகரிப்பதற்குரிய பாதையானது விருத்தியாகும். அத்துடன் இந்த நிலைப்பாடானது இலங்கையில் எதிர்பார்க்கப்படும் பொருளாதார அபிவிருத்திக்கு ஒரு தூணாகவும் அமையும். இந்த இலக்கானது சாதிக்கப்படல் வேண்டுமாயின் இலங்கையில் முன்னெடுக்கப்படும் ஆராய்ச்சிகளாவன கேள்வியினை நோக்கிய ஆராய்ச்சிகளாக, நாட்டினது பிரதான கைத்தொழிற்துறைகளின் தேவைப்பாடுகளை விளிக்கும் ஆராய்ச்சிகளாக மற்றும் பொருளாதாரத்தை முன்னெடுத்துக் கொண்டு செல்ல எதிர்பார்ப்பவைகளாக அமைதல் வேண்டும்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கு பங்களிப்பு செய்வதற்காக, ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் மற்றும் கைத்தொழிற்துறைகள் ஆகியவற்றின் அக பங்காளிகளை ஒன்று சேர்த்து அதாவது அகரீதியில் ஆராய்ச்சி அபிவிருத்தி

கைத்தொழிற்துறையில் முன்னணியில் இருப்போரினை ஒன்றிணைப்பதன் மூலம் அகரீதியில் ஒரு வலு மிகுந்த நிலைப்பாட்டினை கட்டியெழுப்பலே அரச ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி தனியார் துறை – பங்குடமை நிகழ்ச்சித்திட்டமாகும். விஞ்ஞான தொழில்நுட்பத்தில் ஆராய்ச்சி அபிவிருத்திகளை அதிகரித்தலானது, ஏற்றுமதிகளின் அதிகரிப்பு, ஏற்றுமதிகளை பல்வகைமை படுத்தல், மற்றும் இறக்குமதிகளுக்கான பிரதியீடுகளை அதிகரிப்பதற்கு ஊக்கத்தை வழங்கல் போன்ற நடவடிக்கைகளுக்கு வழி வகுப்பதன் மூலம் பொருளாதார விருத்திக்கான பாதை மேலும் திறக்கப்படுகின்றது. ஒரு புதிய அல்லது சிறந்த உற்பத்தியினை விருத்தி, செயன்முறை, சேவைகள், பெறுமானம் அதிகரிப்பு ஆகியவற்றினை விருத்தி செய்யக்கூடிய புதிய ஆராய்ச்சிகள் மற்றும் வர்த்தக ரீதியில் சாத்தியப்படக்கூடிய வகையில் தொழில்நுட்பவியல் சிக்கல்களை தீர்க்கும் முறைகள் என்பன மேற்கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டத்தில் இணைத்துக் கொள்ளக்கூடியனவாக கருதப்படும்.வேறுபட்ட துறைகளுக்கிடையே ஏற்படக்கூடிய அர்த்தமுள்ள பங்குடமைகளாவன, எமது ஆராய்ச்சி நிபுணத்துவம், கிரயம், சேவைகள் மற்றும் வசதிகள் என்பனவற்றை பகிர்ந்துகொள்ள உதவுவதனால் அது கைத்தொழிற்துறையின் ஆராய்ச்சி அபிவிருத்தி தேவைப்பாடுகளுக்கு தீர்வுகளை பயனுறுதியுடன் விருத்தி செய்ய துணையாக இருக்கும். அத்துடன் இத்தகைய பங்குடமையானது அரச ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளின் வினைத்திறனை அதிகரிக்கும் என்பதுடன் அதன்மூலம் பயன்படுத்தப்படும்நேர அளவும் குறையும். அரச துறையினருடன் இணைந்து தனியார் துறையினர் முன்னெடுக்கும் ஆராய்ச்சி அபிவிருத்தி நடவடிக்கைகளுடன் தொடர்புடைய ஆராய்ச்சி அபிவிருத்தி செலவினங்களுக்கு வரிகள் கொடுப்பனவுகளுக்கு அரசு வரிச்சலுகைகளை வழங்கும். அரசு – அக நிறுவகங்கள் - அமைச்சுகள் – பல்கலைக்கழகங்கள் – ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவகங்கள் – கூட்டுறவுத்துறை – சிறிய இடைநிலை வினைமுயலுனர்கள் துறை என்போர்களுக்கிடையே தேசிய தேவைப்பாடுகளுக்கு ஆராய்ச்சி அடிப்படையிலான தீர்வுகளை தேசிய ஆராய்ச்சி மன்றம் வழங்கும்.

**ஏனைய நிகழ்ச்சித்திட்டங்கள்**

எல்லைகடந்த நிகழ்ச்சித்திட்டங்கள் :– வருடத்தின் ஒவ்வொரு காலாண்டுகளிலும் ஆராய்ச்சி மானியங்களின் விளைவளைவுகளை பொது மக்களுக்கு தெரியப்படுத்தும்பொருட்டு தொழில்நுட்பவியல் ஆராய்ச்சி அமைச்சின் வழிநடத்தலின் கீழ் ஒரு எல்லைகடந்த நிகழ்ச்சித்திட்டம் முன்னெடுக்கப்படும்.

பொது விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டம் :– மானியம் பெறுனர்கள் அவர்களின் ஆராய்ச்சி தொடர்பிலான விபரங்களை நகர விஞ்ஞானவியல் சஞ்சிகைகளில் பிரசுரிப்பதற்கு ஊக்குவிப்பு செய்யப்படுவர். அதேவேளையில் பொது மக்கள், ஆராய்ச்சி தேடல்களின் முடிவுகளை அறிந்துகொள்ளும் பொருட்டு விஞ்ஞானிகள், அவர்களின் ஆராய்ச்சித் தேடல்கள் பற்றிய விபரங்களை புதினப்பத்திரிகைகளில் பிரசுரிப்பதற்கு தேசிய ஆராய்ச்சி மன்றம் ஆதாரமாக இருக்கின்றது.

# சிறப்பியல்புகள் – 2017

## இலக்கை நோக்கிய பல்துறை ஆராய்ச்சி மானியங்கள்

2017 ஒக்டோபர் மாதம் தேசிய ஆராய்ச்சி மன்றமானது, 2018 ஆம் ஆண்டின் நிமித்தம் புதிய மானியங்களுக்கான விண்ணப்பங்களைக் கோரி விளம்பரப்படுத்தியது.

| | 2014 | 2016 | 2018 |
|---|---|---|---|
| பெற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 60 | 50 | 25 |
| விரிவான மதிப்பிடுகை மேற்கொள்ளப்படுவதற்கு குறும் பட்டியலிடப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 21 | 11 | 16 |
| முன்வைப்பதற்கு குறும்பட்டியலிடப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 11 | 06 | பணி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது |
| வழங்கப்பட்ட மானியங்களின் எண்ணிக்கை | 05 | 03 | பணி செய்யப்பட்டுக் கொண்டிருக்கின்றது |

2014/2016 ஆம் ஆண்டில் வழங்கப்பட்ட இலக்கை நோக்கிய பல்துறை மானியங்கள் எட்டு என்பதுடன் அவை 2017 ஆம் ஆண்டில் செயற்படுபவன. இக் கருத்திட்டமானது அதனது இரண்டாம் ஆண்டில் எந்தளவு முன்னேற்றத்தை காட்டுகின்றது என்பது தேசிய ஆராய்ச்சி மன்றத்தின் கருத்திட்ட கண்காணிப்பு உசாவுனரான ஆர். பி. மாபா அவர்களினால் கண்காணிக்கப்படும்.

நடைமுறையிலிருக்கும் இலக்கை நோக்கிய மானியங்கள்:

- **இலங்கையில் டெங்குவை கட்டுப்படுத்துவதற்கு நோய் காரணி பல்வகைமைகளை பயன்படுத்தி விரிவான ஆராய்ச்சி பிரேரணைகள், புதிய உற்பத்திகளின் விருத்தியும் சமூகத்துடன் தொடர்பிணைப்பும்.**
  (முதன்மை முதலீட்டாளர் – கலாநிதி. எம். ஹபுகொட மற்றும் பிரதி முதன்மை முதலீட்டாளர் பேராசிரியர். நில்மின் குணவர்த்தன – களனி பல்கலைக்கழகம்.)

இந்தக் கருத்திட்டத்தின் நோக்கானது, டெங்குக்குரிய நோய்க்காரணியை இரசாயன ரீதியாகவும் உயிரியல் ரீதியாகவும் கட்டுப்படுத்தல், இயற்கையாகவே இவை வளரும் இடங்களை குறைத்தல், நெநோ தொழில்நுட்பத்தின் உதவியுடன் கிருமிகளை கொல்லக்கூடிய யன்னல் திரைச்சீலைகள் மற்றும் நுளம்பு வகைகள் என்பனவற்றை தயாரித்து நுளம்புகள் கடிக்கக்கூடிய சந்தர்ப்பங்களை குறைத்தல் மற்றும் டெங்கு நோய் கட்டுப்படுத்தலில் சமூகத்தின் பங்களிப்பினை மேம்படுத்துதல்.



- **இலங்கையில் பாம்புக் கடிக்கு எதிராக பல்விணைத்திறன் நஞ்செதிர்பி ஒன்றினது விருத்தி**

  (முத. முதலீ.: பேரா. ஐ. கவரம்மன மற்றும் பிரதி முத. முதலீ.: கலாநிதி. ஏ. டங்கொல்ல, பேராதனிய பல்கலைக்கழகம்)

  அதிநவீன பாம்புக் கூடமொன்றை விருத்தி செய்வதன் ஊடாக இலங்கையில் மருத்துவ ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த பாம்புகளினது நஞ்சினை சேகரித்து பகுப்பாய்வு செய்தலானது இக்கருத்திட்டத்தில் உள்ளடங்கும் ஒரு குறிக்கோளாகும்.

இலங்கையில் பாம்புக் கடிக்கு பல்விணைத்திறன் நஞ்செதிர்ப்பியினை விருத்தி செய்தல்; மற்றும் இலங்கையில் நஞ்செதிர்ப்பியினை உற்பத்தி செய்வதற்கு குதிரை வளர்ப்பிடமொன்றை தாபித்தல்.




- **பாலில் சுயதேவையை பூர்த்தி செய்வதற்கு பாற்பண்ணைகளின் தரத்தை மேம்படுத்தல்.**

(முத.முதலீட்:பேராசிரியர் –மிசாகா பி.பி.விஜயகுணவர்தன மற்றும் பிரதி முத.முதலீட்:திரு.கெ.மஹிபாலா,பேராதனிய பல்கலைகழகம்)

இக்கருத்திட்டத்தின் நோக்கமானது போசணை முகாமைத்துவத்தை மேம்படுத்தல், சிறந்த உணவு சூத்திரங்களை பின்பற்றுதல், மீள் உற்பத்தி வினைத்திறனை அதிகரித்தல், அதி கூடிய கருத்தரிப்பு வீதத்தினை அடைவதற்குரிய நெறிமுறைகள், 18-20 நாட்களில் கருத்தரிப்பினை முன்பாகவே அறிந்துக்கொள்வதற்கான செலவுக்குறைச்சலில் ஓர் களக்கருவி,பொதுவாக ஏற்படக்கூடிய முலையழற்சி நோயினை இனம் காணவும் மற்றும் அதற்கு பொருத்தமான நுண்ணுயிர் கொல்லியினை பயன்படுத்தி விலங்கின் நலத்தை மேம்படுத்தல் போன்ற நடவடிக்கையினூடாக சகல விவசாய காலநிலை உடைய பிரதேசங்களில் பால் உற்பத்தியை அதிகரித்தல்.



- **இலங்கையில் நோய்க்குரிய காரணம் அறியப்படாத தீவிர சிறுநீரக நோய் பற்றிய விரிவான ஆய்வு**

(முத. முதலீட்: பேரா. ஆர்.எல்.ஆர். சந்ரஜித் மற்றும் பிரதி முத. முதலீட்: பேரா. ஜே.ஜி.எஸ். ரணசிங்க, பேராதனிய பல்கலைக்கழகம்)

தீவிரமான இந்த சிறுநீரக நோயினை பற்றிய அறிவு போதியளவு இல்லாத இந்த காலகட்டத்தில் இந்த நோயினை வேறுபட்ட கோணங்களிலிருந்து அறிந்துக் கொள்ளலே இந்த கருத்திட்டத்தின் நோக்காகும். இந்த நோய் தீவிரமடைவதற்கும் இந்த நோயின் விளைவால் இறப்பு சம்பவிப்பதற்குமான காரணிகளை அறிய CKDu நோயினை உடைய நோயாளிகளின் இரத்தம் மற்றும் சிறுநீரின் மாதிரிகள் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. கிரண்டுருக்கோட்டே மற்றும் வில்கமுவ போன்ற நோய்த்தாக்கமுடைய பிரதேசங்களிலுள்ள கிணறு, ஏரிகள் மற்றும் வயல்களில் உள்ள நீரில் பாரமான உலோகங்களை இருக்கின்றதா என்பதை கண்டறிவதற்காக அவற்றிலிருந்து நீர் மாதிரிகள் பெறப்பட்டு ICPMS இனை பயன்படுத்தி புவியியல், சூழல் ஆய்வும் முன்னெடுக்கப்பட்டதுடன், மஹாவலி பிரதேசங்களிலுள்ள மாசுறும் தன்மையினை நீக்கும் பொருட்டு வரைபடவியல் பயன்படுத்தப்பட்டதுடன் பொதுமக்களுக்காக விழிப்புணர்ச்சி நிகழ்ச்சித்திட்டமும் நடாத்தப்பட்டது.



- **இலங்கையில் காலநிலைக்குகந்த தாவர வகைகளையும் மற்றும் கமச்செய்கை தொழில்நுட்பங்களையும் இலங்கையில் விருத்தி செய்தல்.**

(முத. முதலீட்: கலாநிதி. டபிள்யு.எம். டபிள்யு. வீரகோன் மற்றும் பிரதி முத. முதலீட்: கலாநிதி. டி.எம்.கெ.பி. சேனாநாயக்க - கள தாவர ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி நிறுவகம் மஹா இலுப்பலாம)

இதன் நோக்கமானது உயர் விளைச்சல், பூச்சிகள், நோய்களுக்கு தாக்குப்பிடிக்கக்கூடிய தன்மை, மிளகாய், சோளம் மற்றும் அரிசியில் மட்டுபடுத்தப்பட்ட வகைகள், உயர் வெப்பம் மற்றும் நீர்ப்பற்றாக்குறைக்கு தாக்குப்பிடித்தல், காலநிலைக்குகந்த விவசாய செயன்முறைகளை அறிமுகப்படுத்தல், மண் ஈரப்பதன் சுட்டிகளை பயன்படுத்தி வறட்சியினை துணிதல்.



- **போதுமானளவு விளைவளவினை பெற்றுக்கொள்தல் மற்றும் மண்ணின் பசளைத் தன்மையினை அதிகரித்தல் போன்றவைகள் பேணப்படும் அதேநேரத்தில் சூழல் ஒவ்வுடைமையுடைய கமத்தொழில் தொழில்நுட்பங்களை பாவிப்பதனூடாக அசேதன பசளையின் பாவனையை குறைத்தல்.**

(முத. முதலீட்: கலாநிதி. சமன் தர்மகீர்த்தி, கலாநிதி. டபிள்யு. எஸ். டன்தெனியா, பேராதனை பல்கலைக்கழகம்.)

இதன் பிரதான குறிக்கோளானது, சூழல் மற்றும் பயிர்ச் செய்கையுடன் ஒவ்வுகின்ற தொழில்நுட்பங்களை விருத்தி செய்வதனூடாக சேதன பசளையின் பாவனையை குறைப்பதுடன் இலங்கையில் அரிசிப் பயிர்ச் செய்கையினை மேம்படுத்துதல், அத்துடன் இத்தகைய தொழில்நுட்பங்களினை பயன்படுத்துவதன் மூலம் தாவரங்களை செழிப்புடன் வளர்ப்பதற்கு முற்படுவதுடன் அரிசிப் பயிர்ச் செய்கை துறையினைச் சார்ந்த ஏனைய தாவரங்களிலும் பயன்படுத்தப்படும் இரசாயன பசளையின் அளவையும் குறைத்தல். தனியார் துறை முதலீட்டாளர்களுடன் பங்குடைமைகளை முன்னெடுப்பதனூடாக, விருத்தி செய்யப்பட்ட தொழில்நுட்பங்களை தாவர வளர்ப்பாளர்களுக்கு அறிமுகப்படுத்துதல்.



- **நில நீரில் கரைந்துள்ள திண்ம மற்றும் புளோரைட்டுகள் என்பனவற்றை சீராக்கம் செய்வதற்கு ஒரு மாதிரி வசதி ஒன்றினை விருத்தி செய்தல் (உலர் வலய குடிநீர் பிரச்சனைக்கு ஒரு நிலையான தீர்வு)**

(முத. முதலீட்: பேராசிரியர். ரோஹன் வீரசூரிய, கலாநிதி. எஸ்.கே. வேரகொட, தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம்)




உலர் வலயத்தில் நீரின் தரம் தொடர்பில் இருக்கின்ற பிரச்சனைக்கு ஒரு நிரந்தர தீர்வினை வழங்குதலே இந்தக் கருத்திட்டத்தின் நோக்காகும். நீரிலுள்ள மேலதிக புளோரய்ட் மற்றும் கரைந்துள்ள கழிவுகள் என்பனவற்றை ஏற்புடைய தொழில் நுட்பத்தினை பயன்படுத்தி ஒழுங்குமுறைப்படுத்துவதற்கு மின் - உறைவிப்பு மற்றும் வடிப்பதற்கு மெல்லிய சவ்வு என்பனவற்றை பயன்படுத்துவதன் மூலம் இந்த இயந்திரத்தை வடிவமைத்தல். இந்த உத்தேச நீர் பேணுகை அலகானது ஆரம்ப கட்டத்தில் சிறிய கிராமங்களுக்கு மட்டுமே அறிமுகப்படுத்தப்படும். சுத்திகரிக்கப்பட்ட நீரானது, தேசிய நீர் வழங்கல் வடிவமைப்பு சபையின் கட்டுப்பாட்டின் கீழ், அந்த நீர் வளங்களுக்கு அண்மித்ததாக இருக்கின்ற அக் கிராமத்து நுகர்வாளர்களுக்கு வழங்கப்படும். இது, குடிநீர் பிரச்சனைக்கு முகம் கொடுக்கும் சமுதாயத்தினருக்கு மிகச் சிறப்பான தீர்வினை வழங்கும்.

- **நீரை தூய்மையாக்குவதற்கு உயர் சாதனங்களை அடிப்படையாகக் கொண்ட நீர் வடிகட்டியை விருத்தி செய்தல்**

(முத. முதலீட்: கலாநிதி. ரோஹினி டி சில்வா, பேராசிரியர். நளின் டி சில்வா, கொழும்பு பல்கலைக்கழகம்)

குறைந்த செலவினத்தாலும் சிறந்த பயனைத் தரக்கூடியதும் அதுபோன்று மின்சாரத்தின் துணையின்றி நீரைத் தூய்மையாக்கக்கூடியதுமானதொரு நீர் வடிகட்டியினை கிராமிய சமுதாயத்தினருக்கு வழங்குதலே இதன் நோக்காகும். நிலையான இந்த நீர் தூய்மையாக்கல் முறையானது, உள்ளூர் உற்பத்தியாளரால் உற்பத்தி செய்யப்படும். பல்முறைமைகளை உள்ளடக்கி அமைக்கப்பட்டிருக்கும் இந்த வடிவமைப்பானது, நீரிலுள்ள பக்டீரியா, சேதன மாசுக்கள், நீர்க்

கலங்கல்கள், பாரமான உலோகங்கள் மற்றும் ஏனைய அசேதன மாசுறு பதார்த்தங்களை அகற்றும்.



# தேசிய ஆராய்ச்சி மன்ற முதலீட்டாளரை நோக்கிய ஆராய்ச்சி மானிய நிகழ்ச்சித்திட்டம்

2017 ஆம் ஆண்டானது, தேசிய ஆராய்ச்சி மன்றத்தினது முதலீட்டாளரை நோக்கிய ஆராய்ச்சி மானிய நிகழ்ச்சித்திட்டத்திற்கு புதினப்பத்திரிகை விளம்பர அறிவித்தல்களினூடாக விண்ணப்பங்களுக்கு அழைப்பு விடுத்தலோடு தொடங்கப்பட்டது. இந்த புதினப்பத்திரிகை விளம்பர அறிவித்தல்களாவன சகல பல்கலைக்கழகங்கள், பீடங்கள் மற்றும் ஆராய்ச்சி அபிவிருத்தி நிறுவனங்களுக்கிடையே சுற்றுக்கு விடப்பட்டது.

2017 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 31 ஆம் திகதி விண்ணப்பங்களுக்கு அழைப்பு விடுத்தலானது முடிவிற்கு கொண்டுவரப்பட்டதுடன் 105 விண்ணப்பங்கள் பெற்றுக்கொள்ளப்பட்டன. நடைமுறையிலிருக்கும் மானியம் தொடர்பிலான வருடாந்த முன்னேற்ற அறிக்கையானது மதிப்பிடல் செய்தல் பொருட்டு வருடத்தின் முதலாவது காலாண்டின்போது அனுப்பி வைக்கப்பட்டது.

சம்பந்தப்பட்ட துறையில் நிபுணத்துவமுடைய மதிப்பீட்டாளர்களுக்கு விண்ணப்பங்கள் (2017) அனுப்பி வைக்கப்பட்டன. குழு கலந்துரையாடலினூடாக விண்ணப்பங்களை மேலும் நுண்ணாய்வு செய்த மன்றமானது உயர் விஞ்ஞானத் திறமை மற்றும் தேசிய ரீதியில் முக்கியத்துவம் ஆகிய விடயங்களை கருத்திற்கொண்டு அவற்றின் அடிப்படையில் விண்ணப்பங்களை தெரிவுசெய்தது.

| செயற்பாடு | 2015 | 2016 | 2017 |
|---|---|---|---|
| மதிப்பிடலுக்கு பின்பு நிதியீட்டிற்காகதெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களின் எண்ணிக்கை | 53 | 36 | 33 |
| நிதியீடு செய்யப்பட்ட மானியங்களின் எண்ணிக்கை | 50+11* | 34 | 32 |
| திறைசேரி நிதியீட்டினூடாக வழங்கப்பட்ட மானியங்களின் மொத்தப் பெறுமானம் | ரூ. 218.0மில் | ரூ.107.6மில் | ரூ.128.7மில் |

*முன்னைய வருடத்தில் தெரிவுசெய்யப்பட்ட மானியங்கள்

சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 31% (33/105) மட்டுமே தெரிவுசெய்யப்பட்டது. தெரிவுசெய்யப்பட்ட விண்ணப்பங்களாவன நிதியீட்டின் நிமித்தம் திறைசேரிக்கு சமர்ப்பிக்கப்பட்டது.

வருடகாலப்பகுதியில் 2017 ஆம் ஆண்டில் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பங்களில் 32 ஆராய்ச்சி மானியங்களுக்கு நிதியீடு வழங்கப்பட்டதுடன் மானிய செயற்பாடுகளும் தொடங்கப்பட்டன.

வருடகாலப்பகுதியின் இறுதியில் 16 மானியங்களுக்கு மதிப்பீடு செய்தல் பூரணப்படுத்தப்பட்டது.

## ஆராய்ச்சி மானியம் நிதியீடு செய்யப்பட்டது: - 2017

| Grant No. | Principal Investigator & Institution | Title |
|---|---|---|
| 17-006 | பேராசிரியர் ஜீ.ஏ.கே.எஸ். பெரேரா<br>வயம்பா பல்கலைக்கழகம் இலங்கை | Value addition to Sri Lankan natural rubber in the field of Power and Energy |
| 17-007 | கலாநிதி. ஆர்.ரி. டீ சில்வா<br>இலங்கை நெநோ தொழில்நுட்பவியல் நிறுவகம் | Using Nano/micro-capsules for Self-healing Epoxy Composites |
| 17-008 | கலாநிதி. ஜே.எம்.கே.ஜே.கே. பிரேமரத்ன<br>வயம்பா பல்கலைக்கழகம் இலங்கை | Risk assessment of foodborne pathogens in food commodities available in the Sri Lankan market and application of biocontrol measures to ensure food safety |
| 17-010 | பேராசிரியர். டீ.எம். டீ கொஸ்டா<br>பேராதெனிய பல்கலைக்கழகம் | Analysis of pesticide residues and evaluation of some beneficial effects along with farmer perception of an eco-friendly crop management package for chili and tomato in comparison to existing commercial cultivation practices conducted in Sri Lanka |
| 17-011 | கலாநிதி. ஆர்.ஆர். ரட்னாயக்க<br>தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம் | Development of baseline soil information system for soil C and other nutrients for paddy growing soils in Sri Lanka |
| 17-017 | பேராசிரியர். ஜே.பீ. ஈஸ்வரா<br>பேராதெனிய பல்கலைக்கழகம் | Rapid multiplication and Production of Agarwood Fragrant Constituents by Plant Cell and Tissue Culture of *Gyrinopsis walla* |
| 17-018 | கலாநிதி. கே.வீ.டீ.எஸ். சதுரங்க<br>மொரட்டுவ பல்கலைக்கழகம் | Design and Development of a Soft Orthotic Device for Lower Limb and Spinal Assistance |

| | | |
|---|---|---|
| 17-019 | கலாநிதி. சமின்டு தீபகொட<br>பேராதெனிய பல்கலைக்கழகம் | Launching a Greenhouse Gas Emissions Technology Evaluation Center (GRETEC) |
| 17-020 | பேராசிரியர். காமனி தென்னகோன்<br>உயிர் இரசாயனவியல் மூலக் கூற்றுக்குரிய உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம் (IBMBB) | Mutations and polymorphisms of mitochondrial genes as risk factors for sporadic breast cancer in Sri Lankan patients of Sinhalese ethnicity |
| 17-025 | கலாநிதி. ஏ.எம்.சீ.பீ.கே. அத்தநாயக்க<br>பேராதெனிய பல்கலைக்கழகம் | Baseline concentrations, solubility and spatial variability of potentially toxic trace elements in soils in Up- and Mid-country Wet zone in Sri Lanka |
| 17-027 | பேராசிரியர். எஸ்.பீ. பென்ஜமின்<br>தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம் | Taxonomic revisions of jumping spider subfamilies Ballinae and Spartaeinae of Sri Lanka based on morphology and DNA barcodes |
| 17-028 | கலாநிதி. டீ.எம்.யூ.ஏ.கே. பிரேமரத்ன<br>ருஹுணு பல்கலைக்கழகம் | Igneous rocks in the Mannar Basin as potential evidence from Sri Lanka for the juxtaposition of the Reunion Hotspot and the impacts of the igneous rocks on the hydrocarbon exploration in the Mannar Basin |
| 17-029 | கலாநிதி. ஏ.பீ. அத்தநாயக்க<br>ருஹுணு பல்கலைக்கழகம் | Development of an antidiabetic agent from *Coccinia grandis* (L.) Voigt (Cucurbitaceae) for diabetes mellitus |
| 17-033 | கலாநிதி. சுசந்தி ஜயசிங்க<br>பேராதெனிய பல்கலைக்கழகம் | Combined therapeutic drug leads for antidiabetic and anti-hyperlipidaemic treatments from the selected combined medicinal plants |
| 17-037 | பேராசிரியர். ஏ.எல்.ரி. ஹேவவாசம்<br>பேராதெனிய பல்கலைக்கழகம் | Investigation of Weathering and Erosional Processes in the Catchment of the Ma Oya Tributary of the Mahaweli River |
| 17-038 | கலாநிதி. டீ.டீ.சீ. வன்னியாராய்ச்சி<br>ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் | An automated system to quality control the fermentation stage in black tea manufacturing process |
| 17-042 | கலாநிதி. ருவந்தி ரணசிங்க<br>உயிர் இரசாயனவியல் மூலக் கூற்றுக்குரிய உயிரியல் மற்றும் உயிர் தொழில்நுட்பவியல் நிறுவகம் (IBMBB) | Insight for molecular Anthropology of early people in Sri Lanka: Ancient human mtDNA and Molecular sex analysis of archeological skeletal remains at Udupiyangalge and Alugalge caves |
| 17-047 | கலாநிதி. எச்.டீ. யாபா<br>பேராதெனிய பல்கலைக்கழகம் | Optimization of shear retrofilling of RC beams via non-linear numerical analysis |
| 17-054 | பேராசிரியர். யூ.எல்.பி. ஜயசிங்க<br>தேசிய அடிப்படை கற்கைகள் நிறுவகம் | Bioactive metabolites of endophytic fungi from the medicinal plants *Coccinia grandis, Costus speciosus and Gymnema sylevestre* used in indigenous medicine for treatment of diabetes mellitus and possible commercial applications |
| 17-055 | கலாநிதி. வை.எஸ். விஜயசிங்க<br>களனி பல்கலைக்கழகம் | Molecular characterization of carbapenemase producing enterobacteria (CPE) isolated from a tertiary care teaching hospital in Sri Lanka & validation of a rapid CPE detection protocol |

| | | |
|---|---|---|
| 17-058 | கலாநிதி. பி.எல்.டபிள்யூ.கே. பாலசூரிய<br>வயம்பா பல்கலைக்கழகம் இலங்கை | Temporal variation of cyanobacterial community in fertilized and long-term unfertilized tropical rice fields |
| 17-060 | பேராசிரியர். டபிள்யூ.கே. மம்பியராய்ச்சி<br>மொரட்டுவ பல்கலைக்கழகம் | Adaptation of Mechanistic Pavement Design Guide for Road Designed based on Empirical Design Methods. |
| 17-064 | கலாநிதி. எம்.எஸ்.டீ. பெர்னாந்து<br>மொரட்டுவ பல்கலைக்கழகம் | Improving effectiveness of Massive Open Online Courses (MOOCs) to meet the 21st century challenges |
| 15-150 | 1,571,300.00 | - |
| 15-151 | 68,972.72 | - |
| 15-152 | 761,626.00 | - |
| 15-153 | 2,966,939.95 | - |

| | | |
|---|---|---|
| 13-095 | | 20,000.00 |
| 13-115 | 104,140.58 | - |
| 13-121 | - | 20,000.00 |
| 13-122 | 557,809.48 | - |
| 13-130 | 339,439.55 | - |
| 13-152 | 0.93 | 55.00 |
| 13-156 | 396,136.00 | 20,000.00 |
| 13-158 | 171,995.02 | 5,000.00 |
| 14-013 | 93,405.82 | - |
| 14-015 | 374,330.31 | 20,000.00 |
| 14-016 | 705,276.89 | - |
| 14-019 | 171,019.29 | - |
| 14-023 | 200,000.00 | - |
| 14-027 | 120,511.66 | - |
| 14-038 | 590,844.96 | - |
| 14-045 | 704,062.30 | - |
| 14-067 | 1,880,578.84 | - |
| 14-069 | 648,703.81 | 20,000.00 |
| 14-072 | 879,123.07 | 20,000.00 |
| 14-079 | 2,100.72 | - |
| 14-094 | 2,085,147.48 | - |
| 14-117 | 1,784,952.08 | - |
| 14-123 | 3,483,445.30 | - |
| 14-134 | 783,410.82 | - |
| 14-139 | 1,157,360.64 | - |
| 15-004 | 2,152,688.55 | - |
| 15-007 | 1,982,958.40 | - |
| 15-008 | 5,805,255.29 | - |
| 15-013 | 888,841.00 | - |
| 15-017 | 469,229.00 | - |
| 15-020 | 2,577,564.13 | - |
| 15-022 | 2,266,659.68 | - |
| 15-023 | 117,015.00 | - |
| 15-024 | 1,699,625.00 | - |
| 15-027 | 1,779,877.84 | 20,000.00 |
| 15-028 | 12,854,008.85 | 20,000.00 |
| 15-030 | 1,622,623.09 | - |
| 15-032 | 1,038,931.81 | - |
| 15-033 | 3,932,546.80 | - |
| 15-036 | 3,192,124.65 | - |
| 15-041 | 480,900.76 | - |
| 15-043 | 2,745,501.25 | - |
| 15-045 | 382,029.56 | 618.00 |
| 15-048 | 2,039,186.12 | - |

| | | |
|---|---|---|
| 15-154 | 298,276.48 | - |
| 15-155 | 300,100.37 | - |
| 16-001 | 1,917,099.75 | - |
| 16-012 | 884,626.47 | - |
| 16-016 | 1,407,935.50 | - |
| 16-022 | 1,002,980.00 | - |
| 16-023 | 2,752,616.70 | - |
| 16-024 | 782,505.00 | - |
| 16-025 | 859,403.35 | - |
| 16-029 | 4,258,250.00 | - |
| 16-031 | 3,805,678.25 | - |
| 16-033 | 869,205.00 | - |
| 16-038 | 2,874,973.75 | - |
| 16-044 | 906,421.81 | - |
| 16-052 | 596,145.00 | 15,578.00 |
| 16-054 | 1,344,163.38 | - |
| 16-059 | 841,708.50 | - |
| 16-071 | 867,951.00 | - |
| 16-072 | 580,375.00 | - |
| 16-075 | 2,107,979.55 | - |
| 16-078 | 518,629.65 | - |
| 16-080 | 1,084,944.50 | - |
| 16-086 | 303,913.10 | - |
| 16-087 | 2,064,625.00 | - |
| 16-094 | 2,652,349.43 | - |
| 16-098 | 741,525.00 | - |
| 16-101 | 1,801,784.75 | - |
| 16-123 | 1,727,175.37 | - |
| 16-128 | 1,310,030.57 | - |
| 16-129 | 2,526,176.84 | - |
| 16-138 | 4,004,479.00 | - |
| 16-142 | 2,386,333.81 | - |
| 16-144 | 740,076.86 | - |
| 16-149 | 603,530.00 | - |
| 16-152 | 5,585,750.84 | - |
| 17-006 | 3,535,950.00 | - |
| 17-007 | 2,860,000.00 | - |
| 17-008 | 4,900,000.00 | - |
| 17-010 | 4,977,908.00 | - |
| 17-011 | 4,694,973.00 | - |
| 17-017 | 4,129,916.00 | - |
| 17-018 | 3,600,000.00 | - |
| 17-019 | 4,067,200.00 | - |
| 17-020 | 5,259,555.60 | - |

| | | |
|---|---|---|
| 15-050 | 2,089,317.94 | - |
| 15-056 | 3,160,178.54 | - |
| 15-057 | 3,933,398.00 | - |
| 15-058 | 2,952,353.20 | - |
| 15-063 | 2,356,602.32 | - |
| 15-068 | 3,459,625.00 | - |
| 15-069 | 1,183,725.00 | - |
| 15-070 | 4,846,275.00 | - |
| 15-071 | 1,153,597.34 | 26,400.00 |
| 15-074 | 803,625.00 | - |
| 15-075 | 4,994,625.00 | - |
| 15-078 | 4,999,625.00 | - |
| 15-084 | 619,021.00 | - |
| 15-087 | 2,676,642.97 | 20,000.00 |
| 15-089 | 3,177,510.00 | - |
| 15-096 | 3,866,979.55 | - |
| 15-097 | 860,125.00 | - |
| 15-108 | 552,010.19 | - |
| 15-109 | 6,810,625.00 | - |
| 15-110 | 2,726,580.00 | 20,000.00 |
| 15-111 | 1,866,836.54 | - |
| 15-113 | 1,371,741.12 | 20,000.00 |
| 15-114 | 1,539,907.67 | - |
| 15-116 | 554,731.73 | - |
| 15-119 | 3,083,375.00 | - |
| 15-124 | 354,452.33 | - |
| 15-127 | 2,217,458.00 | - |
| 15-128 | 240,725.00 | - |
| 15-139 | 617,279.00 | - |
| 15-144 | 190,835.00 | - |
| 15-145 | 6,852,830.60 | 20,003.00 |
| 15-146 | 2,535,692.77 | - |
| 15-147 | 2,768,481.78 | 20,000.00 |
| 15-148 | 3,384,481.83 | - |
| 15-149 | 1,862,219.37 | - |
| 15-150 | 3,699,625.00 | - |
| 15-151 | 809,143.93 | 20,000.00 |
| 15-152 | 1,244,625.00 | - |
| 15-153 | 3,930,310.18 | - |
| 15-154 | 777,001.88 | - |
| 15-155 | 999,414.82 | - |
| 16-001 | 2,607,860.00 | - |
| 16-012 | 3,675,055.00 | - |
| 16-016 | 2,864,625.00 | - |

| | | |
|---|---|---|
| 17-025 | 4,881,000.00 | - |
| 17-027 | 4,824,600.00 | 25,000.00 |
| 17-028 | 3,624,661.00 | - |
| 17-029 | 4,392,610.00 | - |
| 17-033 | 4,763,800.00 | - |
| 17-037 | 4,880,000.00 | - |
| 17-038 | 3,866,375.04 | - |
| 17-042 | 4,967,647.00 | - |
| 17-047 | 1,500,000.00 | - |
| 17-054 | 4,628,552.00 | - |
| 17-055 | 2,706,771.64 | - |
| 17-058 | 1,652,402.00 | - |
| 17-060 | 1,410,000.00 | - |
| 17-064 | 1,400,000.00 | - |
| 17-065 | 1,740,000.00 | - |
| 17-066 | 3,060,000.00 | - |
| 17-069 | 4,850,000.00 | - |
| 17-072 | 5,310,000.00 | - |
| 17-074 | 4,685,000.00 | - |
| 17-086 | 4,974,154.35 | - |
| 17-094 | 4,846,686.00 | - |
| 17-095 | 4,095,888.53 | - |
| 17-098 | 4,944,451.00 | - |
| - | - | - |
| - | - | - |
| - | - | - |
| - | - | - |
| - | - | - |
| - | - | - |
| - | - | - |
| - | - | - |
| | **268,996,863.11** | **100,578.50** |
| மொத்தம் | | **269,097,441.61** |

| | | |
|---|---|---|
| 16-020 | 839,947.60 | - |
| 16-022 | 3,889,625.00 | - |
| 16-023 | 3,271,293.00 | - |
| 16-024 | 782,505.00 | - |
| 16-025 | 2,762,755.00 | - |
| 16-029 | 4,623,350.00 | - |
| 16-031 | 5,849,447.00 | - |
| 16-033 | 2,235,441.00 | - |
| 16-038 | 2,999,625.00 | - |
| 16-044 | 2,691,199.00 | - |
| 16-052 | 1,189,625.00 | - |
| 16-054 | 2,314,118.48 | 5,105.00 |
| 16-059 | 1,467,625.00 | - |
| 16-071 | 2,448,625.00 | - |
| 16-072 | 580,375.00 | - |
| 16-075 | 2,986,125.00 | - |
| 16-078 | 5,869,625.00 | - |
| 16-080 | 1,828,275.00 | - |
| 16-086 | 1,596,681.00 | 20,000.00 |
| 16-087 | 7,064,625.00 | - |
| 16-094 | 5,929,690.00 | - |
| 16-098 | 1,341,525.00 | - |
| 16-101 | 2,799,700.00 | - |
| 16-123 | 2,582,958.37 | - |
| 16-128 | 2,329,625.00 | - |
| 16-129 | 3,929,625.00 | - |
| 16-138 | 5,928,100.00 | - |
| 16-142 | 4,892,625.18 | 20,000.00 |
| 16-144 | 1,968,574.96 | - |
| 16-149 | 999,625.00 | - |
| 16-152 | 5,858,850.84 | - |
| | **288,492,389.41** | **649,281.50** |
| மொத்தம் | | **289,141,670.91** |

| **TO** நிகழ்ச்சித் திட்டம் | 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி | |
|---|---|---|
| | வங்கி | காசு |
| 14-004 | 12,918,054.99 | - |
| 14-005 | 4,942,204.30 | - |
| 14-010 | 6,798,998.23 | - |
| 14-018 | 38,829,862.45 | - |
| 14-024 | 26,339,959.44 | - |

| **TO** நிகழ்ச்சித் திட்டம் | 2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி | |
|---|---|---|
| | வங்கி | காசு |
| 14-004 | 18,686,872.56 | 111,000.00 |
| 14-005 | 9,329,620.97 | - |
| 14-010 | 11,746,507.80 | - |
| 14-018 | 40,364,552.40 | - |
| 14-024 | 39,948,540.67 | 20,000.00 |

| | | |
|---|---|---|
| 16-007 | 40,777,687.92 | - |
| 16-015 | 43,627,071.56 | - |
| 16-018 | 45,405,766.23 | - |
| மொத்தம் | **219,639,605.12** | - |

| | | |
|---|---|---|
| 16-007 | 49,920,000.00 | - |
| 16-015 | 49,900,000.00 | - |
| **Total** | **219,896,094.40** | **131,000.00** |
| மொத்தம் | | **220,027,094.40** |

| அரச தனியார் பங்குடமை நிகழ்ச்சித் திட்டம் | 2017 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி | |
|---|---|---|
| | வங்கி | காசு |
| 14-001 | 1,866,437.07 | - |
| 14-008 | 1,278,456.28 | - |
| 16-003 | 2,434,099.60 | - |
| 16-005 | 979,344.66 | - |
| 16-007 | 400,615.47 | 25,000.00 |
| 16-011 | 24,902,899.71 | - |
| 17-001 | 1,706,739.47 | - |
| | **33,568,592.26** | **25,000.00** |
| மொத்தம் | | **33,593,592.26** |

| அரச தனியார் பங்குடமை நிகழ்ச்சித் திட்டம் | 2016 டிசம்பர் 31 இல் உள்ளவாறான மிகுதி | |
|---|---|---|
| | வங்கி | காசு |
| 12-057 | 1,527,387.50 | - |
| 14-001 | 4,276,575.10 | - |
| 14-008 | 1,341,294.57 | - |
| 15-003 | 198,000.00 | - |
| 16-003 | 2,688,888.88 | - |
| 16-007 | 655,000.00 | - |
| 16-011 | 25,000,000.00 | - |
| **Total** | **35,687,146.05** | |
| மொத்தம் | | **35,687,146.05** |

## 02 ஏனைய நிதியியல் சொத்துக்கள்

| | 2017<br>ரூபாய் | 2016<br>ரூபாய் |
|---|---|---|
| கட்டிட வாடகை வைப்பு | 1,950,000.00 | 1,950,000.00 |
| தொலைத் தொடர்பாடல் வைப்பு | 15,000.00 | 15,000.00 |
| கொள்கலன் வைப்பு | 6,000.00 | 6,000.00 |
| **மொத்தம்** | **1,971,000.00** | **1,971,000.00** |

## 03. சொத்து, ஆதனம் மற்றும் கருவிகள்

| கிரயம் | 2016.12.31 இல் உள்ளவாறான மிகுதி<br>ரூபாய் | மாற்றீடுகள்<br>ரூபாய் | மேலதிகம்/ மாற்றீடுகள்<br>ரூபாய் | விற்பனைகள்<br>ரூபாய் | 2017.12.31 இல் உள்ளவாறான மிகுதி<br>ரூபாய் |
|---|---|---|---|---|---|
| தே.ஆ.ம. அலுவலக சொத்துக்கள் | 14,264,137.50 | | 4,193,212.28 | 4,443,718.23 | 14,013,631.55 |
| மானிய பிரதான கருவிகள் | 322,333,121.21 | | 53,998,382.06 | 26,711,665.98 | 349,619,837.30 |
| மானிய சிறு கருவிகள் | 56,133,590.91 | | 19,463,288.59 | 3,265,770.72 | 72,331,108.78 |
| **மொத்த சொத்துக்கள்** | **392,730,849.62** | - | **77,654,882.93** | **34,421,154.93** | **435,964,577.63** |

| | 2016.12.31 இல் உள்ளவாறான மிகுதி<br>ரூபாய் | மாற்றீடுகள்<br>ரூபாய் | மேலதிகம்/ மாற்றீடுகள்<br>ரூபாய் | விற்பனைகள்<br>ரூபாய் | 2017.12.31 இல் உள்ளவாறான மிகுதி<br>ரூபாய் |
|---|---|---|---|---|---|
| **கழிக்க : பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு** | | | | | |
| தே.ஆ.ம. அலுவலக சொத்துக்கள் | 6,122,743.09 | | 1,378,411.25 | 4,310,192.04 | 3,190,962.30 |
| மானிய பிரதான கருவிகள் | 83,221,908.61 | | 35,225,645.93 | 12,836,370.89 | 105,611,183.60 |
| மானிய சிறு கருவிகள் | 21,902,475.21 | | 10,583,997.19 | 2,403,107.37 | 30,083,365.07 |
| **மொத்தம் பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு** | **111,247,126.90** | | **47,188,054.38** | **19,549,670.30** | **138,885,510.97** |

**தேசிய ஆராய்ச்சி மன்றம் – இலங்கை**

**2017திசெம்பர் 31 இல் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்**

**சொத்து, ஆதனம், கருவியின் புத்தக பெறுமானம்**

| | 2017<br>ரூபாய் | 2016<br>ரூபாய் |
|---|---|---|
| தே.ஆ.ம. அலுவலக சொத்துக்கள் | 10,822,669.25 | 8,141,394.41 |
| மானிய பிரதான கருவிகள் | 244,008,653.70 | 239,358,228.84 |
| மானிய சிறு கருவிகள் | 42,247,743.71 | 33,984,099.46 |
| **மொத்தம்** | **297,079,066.65** | **281,483,722.71** |

## 04. கொடுக்கவேண்டியவைகள்

| | 2017<br>ரூபாய் | 2016<br>ரூபாய் |
|---|---|---|
| தொலை தொடர்பாடல் –<br>கொடுக்கவேண்டியவை | 36,837.40 | 29,043.62 |
| மின்சார கட்டணம் - கொடுக்கவேண்டியவை | 135,000.00 | 19,320.00 |
| நீர் கட்டணம் - கொடுக்கவேண்டியவை | 4,500.00 | 1,500.00 |
| ஏனையவை | 87,656.78 | 113,870.73 |
| கணக்காய்வு கட்டணம் | 345,887.60 | 209,025.60 |
| **மொத்தம்** | **609,881.78** | **372,759.95** |

## 07. ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி

| | 2017<br>ரூபாய் | *2016*<br>ரூபாய் |
|---|---|---|
| மானியம் பெறுனரின் நுகர்வுகள் | 34,386,953.66 | 41,012,302.07 |
| மானியம் பெறுனரின் பி.எச்டி. உதவித் தொகை | 33,049,901.72 | 32,558,589.64 |
| மானியம் பெறுனரின் பிரயாண செலவினம் | 2,319,402.89 | 3,301,999.88 |
| மானியம் பிரசுரிப்பு செலவுத் தொகை | 227,610.27 | - |
| TO நிகழ்ச்சித்திட்ட நுகர்வும் ஏனைய செலவினங்களும் | 11,860,995.29 | 11,776,794.90 |
| TO மானியம் பெறுனரின் பி.எச்டி. உதவித் தொகை | 18,532,034.33 | 15,402,053.75 |
| TO மானியம் பெறுனரின் பிரயாண செலவினம் | 2,320,259.00 | 4,458,731.00 |
| அரச தனியார் பங்குடமை நிகழ்ச்சித்திட்ட நுகர்வுகள் | 470,530.72 | 245,488.00 |
| அரச தனியார் பங்குடமை மானியம் பெறுனரின் பி.எச்டி. உதவித் தொகை | 330,526.83 | - |
| அரச தனியார் பங்குடமை மானியம் பெறுனரின் பிரயாண செலவினம் | 1,137,457.25 | 289,960.40 |

| | | |
|---|---|---|
| அரச தனியார் பங்குடமை மானியங்களை வெளியாட்களுக்கு ஒப்படைத்தல் | 1,285,930.78 | 2,052,146.50 |
| மானியங்களும் நிகழ்ச்சித்திட்ட நிர்வாகமும் | 2,459,960.00 | 3,627,574.32 |
| மாற்றீட்டு வரும்படிகள் | 14,737,958.44 | 21,742,516.76 |
| ஜனாதிபதி விருது வழங்கும் நிகழ்ச்சித்திட்ட செலவினம் | 4,151,517.61 | 3,390,511.59 |
| ஏனையவை | 8,323,548.51 | 2,671,553.51 |
| | **135,594,587.30** | **142,530,222.32** |
| பிரதான / சிறிய கருவிகள் பெறுமானத் தேய்வு | 45,809,643.12 | 40,689,975.81 |
| **06** | **181,404,230.42** | **183,220,198.13** |

| | | |
|---|---|---|
| **05. திறைசேரி நடப்பு வெளியிடுகைகள்** ஜனவரியிலிருந்து டிசம்பர் வரையில் | 20,981,436.00 | 16,679,325.00 |
| | **20,981,436.00** | **16,679,325.00** |
| **மொத்த தொகை** | **337,980,253.72** | **199,899,523.13** |

| | 2017 ரூபாய் | 2016 ரூபாய் |
|---|---|---|
| **08.விநியோகம், நுகர்வு மற்றும் வாடகை** | | |
| பிரயாணம் | 159,630.95 | 267,628.85 |
| காகிதாயிகள், ஏனைய அலுவலக தேவைப்பாடுகள் | 591,659.35 | 102,094.35 |
| எரிபொருள், மசகு எண்ணெய் | 602,624.77 | 650,067.44 |
| திட்ட உணவுகள், மாநாடுகள் | 571,090.56 | 437,467.52 |
| வாகன திருத்துகை, பராமரிப்பு | 480,705.40 | 157,769.92 |
| கட்டிட பேணுகை | 1,155,581.99 | 979,998.49 |
| கணக்காய்வுக் கட்டணம் | 136,862.00 | 109,489.60 |
| தபாற் செலவினம் | 273,156.66 | 346,599.79 |
| மின்சாரம் | 540,404.08 | 323,932.55 |
| நீர் | 18,000.00 | 6,343.18 |

| | | |
|---|---|---|
| தொலைத் தொடர்பாடல் | 490,296.34 | 394,378.26 |
| உத்தரவுப் பத்திரம், காப்புறுதி | 233,113.75 | 243,893.37 |
| வாடகை | 3,932,500.00 | 2,410,208.00 |
| அச்சிடுகை, விளம்பரப்படுத்தல் | 1,554,413.39 | 700,617.50 |
| சொத்து, ஆதனம், கருவிகள் பேணுகை | 498,698.30 | 620,843.51 |
| மொத்தம் | **11,238,737.54** | **7,751,332.33** |

| **09.ஆராய்ச்சி மானியம் மற்றும் ஏனைய நிகழ்ச்சித் திட்டங்கள்** | **2017** ரூபாய் | **2016** ரூபாய் |
|---|---|---|
| முதலீட்டாளர் மானியம் | 129,315,241.65 | 115,251,397.00 |
| அரச தனியார் பங்குடமை மானியம் | 3,421,110.00 | 28,798,702.91 |
| TO மானியம் | 48,523,985.00 | 99,820,000.00 |
| மதிப்பிடுகை கருத்திட்ட கண்காணிப்பு | 2,459,960.00 | 3,580,574.32 |
| ஜனாதிபதி விருது வழங்கல் விஞ்ஞான பிரசுரிப்பு | 4,151,517.61 | 3,390,511.59 |
| ஏனைய நிகழ்ச்சித்திட்டம் | 2,969,652.74 | 686,595.35 |
| மொத்தம் | **190,841,467.00** | **251,527,781.17** |

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය / எனது இல. / My No. : පීඊසී/බී/එන්ආර්සී/1/17/23

ඔබේ අංකය / உமது இல. / Your No. :

දිනය / திகதி / Date : 2018 ඔක්තෝබර් 30 දින

National Research Council
RECEIVED
05 NOV 2018
12945
Colombo 7.

සභාපති,

ශ්‍රී ලංකා ජාතික පර්යේෂණ සභාව

ශ්‍රී ලංකා ජාතික පර්යේෂණ සභාවේ 2017 දෙසැම්බර් 31 දිනෙන් අවසන් වර්ෂය සඳහා වූ මූල්‍ය ප්‍රකාශන පිළිබඳව 1971 අංක 38 දරන මුදල් පනතේ 14(2)(සී) වගන්තිය ප්‍රකාර විගණකාධිපති වාර්තාව

---

මාගේ සමාංක හා 2018 අගෝස්තු 31 දිනැති ලිපියට යොමුවේ.

02. ඉහත සඳහන් ලිපිය සමඟ එවන ලද මාගේ වාර්තාවේ දෙමළ අනුවාදය මේ සමඟ එවා ඇත.

ඊ.ඒ.ජී.ආනන්ද
නියෝජ්‍ය විගණකාධිපති
විගණකාධිපති වෙනුවට

පිටපත් - 1. ලේකම්, විද්‍යා, තාක්ෂණ, පර්යේෂණ, නිපුණතා සංවර්ධන හා වෘත්තීය පුහුණු අමාත්‍යාංශය

2. ලේකම්, මුදල් හා ජනමාධ්‍ය අමාත්‍යාංශය

අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.
No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.

ජාතික විගණන කාර්යාලය
தேசிய கணக்காய்வு அலுவலகம்
NATIONAL AUDIT OFFICE

මගේ අංකය
எனது இல. } ரீஈசீ/பீ/என்ஆர்சி/1/17/23
My No.

ඔබේ අංකය
உமது இல. }
Your No.

දිනය
திகதி } 2018 ஆகஸ்ட் 31
Date

தலைவர்

இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை

**இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையின் 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதிஅதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 2016 இன் 11 ஆம் இலக்க இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை அதிகாரச்சட்டத்தின் 19 ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.



අංක 306/72, පොල්දූව පාර, බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව      இல. 306/72, பொல்தூவ வீதி, பத்தரமுல்லை, இலங்கை.      No. 306/72, Polduwa Road, Battaramulla, Sri Lanka.

## 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந்நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ஐஎஸ்எஸ்ஏஐ 1000 – 1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் சபையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி சபையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியின் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அப்பிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களைத் தவிர்த்து, 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறு இலங்கை தேசிய ஆராய்ச்சி சபையின் நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 2.2.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) செலுத்துகைகள் மேற்கொள்ளப்படாத ஆனால் செயற்திட்டத்திற்கு கொள்வனவுசெய்யப்பட்ட ரூபா 2,448,971 தொகையான 03 உபகரணம் மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களாக கணக்குகளுக்கு எடுக்கப்பட்டிருக்காததுடன் செலுத்துகைகள் மேற்கொள்ளப்பட்ட ஆனால் கொள்வனவு செய்யப்படாத ரூபா 2,521,362 தொகையான 05 உபகரணம் மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்களாக கணக்குகளுக்கு கொண்டுவரப்பட்டிருந்தது.

(ஆ) ரூபா 136,000 கூட்டுத்தொகையான 45 திருத்தஞ்செய்யப்பட்ட காசோலைகள் மீளாய்வாண்டில் தொடர்புடைய செலவினக் கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது.

## 2.3 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமைகள்

2015 யூலை 14 இன் 03/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்பாடு பூர்த்தியடைந்தவுடன் பெறப்பட்ட முற்பணங்கள் உடனடியாக தீர்ப்பனவு செய்யப்பட வேண்டிய போதிலும், மீளாய்வாண்டில் 07 சந்தர்ப்பங்களில் பெறப்பட்ட ரூபா 581,000 கூட்டுத்தொகையான முற்பணங்களின் தீர்ப்பனவுக்கு 20 நாட்கள் தொடக்கம் 287 நாட்கள் வரையான காலப்பகுதியொன்று கடந்திருந்தது. அதேபோன்று, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் 06 ஆய்வு செயற்திட்டங்களுக்கு வழங்கப்பட்ட ரூபா 125,578 தொகையான கட்டுநிதிகள் 2017 திசெம்பர் 31 வரையிலும் தீர்ப்பனவு செய்யப்பட்டிருக்கவில்லை.

## 3. நிதிசார் மீளாய்வு

## 3.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான சபையின் நிதிசார் விளைவுகளினை முன்னைய ஆண்டிற்கான ரூபா 571,740 மிகையுடன் ஒப்பிடுகையில் ரூபா 1,084,732 மிகையொன்றாக காணப்பட்டிருந்தமையினால், முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டில் ரூபா 512,992 இனால் நிதிசார் விளைவுகளில் முன்னேற்றமொன்றினைச் சுட்டிக்காட்டுகின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் ரூபா 3,487,406 இனால் விநியோகம் மற்றும் நுகரத்தக்கப்பொருட்கள் அதிகரித்திருந்த போதிலும் மீண்டெழும் மானியம் ரூபா 4,302,111 இனால் அதிகரித்திருந்தமை மேற்குறித்த அதிகரிப்புக்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தது.

2013 ஆம் ஆண்டில் சபையின் நிதிசார் விளைவுகளில் பற்றாக்குறையொன்று காணப்பட்டிருந்த போதிலும், 2014 ஆம் ஆண்டிலிருந்து மீளாய்வாண்டு வரையிலும் நிதிசார் விளைவுகளில் மிகையொன்று காணப்பட்டிருந்தது. இருப்பினும், ஊழியர்களின் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாச் சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு என்பவற்றை கருத்திற்கொண்ட பின்னர் 2013 ஆம் ஆண்டில் ரூபா 33,450,089 தொகையாகக் காணப்பட்ட பங்களிப்பு 2017 ஆம் ஆண்டளவில் ரூபா 56,780,182 வரை தொடர்ச்சியாக முன்னேற்றமடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றல்

#### 4.1.1 திட்டமிடல்

ஆராய்ச்சி சபையினால் பிரதானமாக தனிநபர் ஆராய்ச்சி செயற்திட்டங்கள், இலக்கிடப்பட்ட பல்நோக்கு விடய ஆராய்ச்சி செயற்திட்டங்கள் மற்றும் தனியார் பொது கூட்டுமுயற்சி ஆராய்ச்சி செயற்திட்டங்கள் என்பன அமுல்படுத்தப்பட்டிருந்த போதிலும், மீளாய்வாண்டிற்காக தயாரிக்கப்பட்ட செயல்நடவடிக்கை திட்டத்தில் ஒவ்வொரு ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்காக மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடுகள் தனித்தனியாக காட்டப்பட்டிருக்கவில்லை.

#### 4.1.2 செயற்பாடுகள் மற்றும் மீளாய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) விஞ்ஞான மேற்கோள்காட்டல் குறிகாட்டியில் (Science Citation Index) (எஸ்சீஐ) பத்திரமொன்றில் வெளியிடுவதன் திறமை "புலன் விசாரணையின்மூலமான ஆராய்ச்சி" செயற்திட்டத்தின் இறுதி விளைவினை மதிப்பீடு அதன் வெற்றியினைத் தீர்மானிக்கின்ற அடிப்படையாக கருதப்படுகின்ற அதேவேளை, தேசிய ஆராய்ச்சி சபை அதிகாரச்சட்டத்தின் 03(ஆ) பிரிவின் பிரகாரம் தேசிய தேவைகளுக்கு பங்களிப்பதற்கான ஆராய்ச்சி அடிப்படையொன்றினை அபிவிருத்தி செய்வதனை வழிவகுத்துக் கொடுத்தல் ஆராய்ச்சி சபையின் நோக்கமொன்றாகக் காணப்படுகின்ற போதிலும், ஆராய்ச்சிகள், அதன் தாக்கம் மற்றும் செயன்முறை ரீதியான பயன்பாட்டு விளைவுகள் தொடர்பில் கவனஞ்செலுத்துவதன் மூலம் அது தொடர்பில் ஆராய்ச்சி சபை அபிப்பிராயமொன்றை வெளிப்படுத்தியிருக்கவில்லை அல்லது பரிந்துரையொன்றை வழங்கியிருக்கவில்லை.

(ஆ) ரூபா 171,915,712 மானியப் பெறுமதியுடைய "புலன்விசாரணை மூலமான ஆராய்ச்சி" 45 செயற்திட்டங்களின் இறுதி அறிக்கை மதிப்பீடுகள் 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் நடாத்தப்பட்டிருந்ததுடன் அதில் ரூபா 88,386,921 மானியப் பெறுமதியொன்றையுடைய 21 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் மதிப்பீட்டு அறிக்கையின் பிரகாரம் செயற்திட்டங்கள்

வெற்றிகரமாக பூர்த்தியாக்கப்பட்டிருந்தது என குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், தேசிய தேவைகளுக்கான அந்த ஆராய்ச்சிகளின் விளைவுகளினைப் பிரயோகிப்பதன் சாத்தியக்கூறு தொடர்பில் மதிப்பீடொன்றை நடாத்தி ஆராய்ச்சியினை முன்னேற்றுவதன் மூலம் நல்லதொரு அல்லது செயற்பாடொன்றின் முன்னேற்றம் தொடர்பில் தீர்ப்பொன்று வழங்கப்பட்டிருக்கவில்லை. அதேபோல், இந்த ஆராய்ச்சி செயற்திட்டங்களின் ரூபா 5,323,000 மானியப் பெறுமதியொன்றுடனான ஒரு ஆராய்ச்சி செயற்திட்டத்திற்கு மாத்திரம் காப்புரிமை பெறப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டில் டிசெம்பர் 31 வரை நடாத்திச் செல்லப்படும் ஆராய்ச்சி செயற்திட்டங்களில், 2014, 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் ரூபா 110,233,227 தொகையான ஏற்பாடொன்றுக்கு வழங்கப்பட்டிருந்த 32 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் நிதிசார் செயலாற்றல் 07 சதவீதம் மற்றும் 50 சதவீதத்திற்கிடையில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஈ) ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கான வழிகாட்டலின் 21 ஆம் இலக்க பொது விதிகள் மற்றும் பிரமாணங்களின் பிரகாரம் செயற்திட்டத்தின் பூர்த்தியிலிருந்து 03 மாதங்களுக்குள் இறுதி அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், 2016 மற்றும் 2017 ஆம் ஆண்டுகளில் பூர்த்தியாக்கப்பட்ட ரூபா 29,419,455 மானியப் பெறுமதியொன்றுடனான 11 ஆராய்ச்சி செயற்திட்டங்கள் தொடர்பில் ஆராய்ச்சி அறிக்கைகள் கணக்காய்வு திகதியான 2018 யூலை வரையிலும் பெறப்பட்டிருக்கவில்லை. அதன் தாமதக் காலப்பகுதி 03 மாதங்கள் தொடக்கம் 19 மாதங்களுக்கிடையில் காணப்பட்டது.

(உ) 2012 ஆகஸ்ட் 31 இல் ஆரம்பிக்கப்பட்ட ரூபா 2,635,000 மானியப் பெறுமதியொன்றையுடைய ஆராய்ச்சி செயற்திட்டமொன்றின் இறுதி அறிக்கையுடன் தொடர்புடைய மதிப்பீட்டு அறிக்கைகள் 2015 ஆகஸ்ட் 30 இல் பூர்த்தியாக்கப்பட்டதுடன் 2017 பெப்ரவரி 25 இல் கையளிக்கப்பட்டிருந்தது. மதிப்பிட்டு அறிக்கையின் பிரகாரம் ஆராய்ச்சி "திருப்திகரமானதாகக்" காணப்பட்டது என குறிப்பிடப்பட்டிருந்தது. இருப்பினும், செயற்திட்டத்தின் பூர்த்தியின் பின்னர் 02 வருடங்களினை விட அதிகமான காலப்பகுதி கடந்திருந்த போதிலும், செயற்திட்ட முன்மொழிவில் குறிப்பிடப்பட்ட 05 எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களில் 03 நோக்கங்களினை அடைவதற்கு தவறப்பட்டிருந்தது.

(ஊ) நாற்று மேடைகளினை ஸ்தாபிப்பதற்கு மற்றும் வணிகமயப்படுத்தலுக்கு பொருத்தமான வல்லப்பட்டை பயிர்ச்செய்கையினை (resin of agarwood plants) முன்னேற்றுவதற்கு தனியார் கம்பனியொன்றுடன் ரூபா 11,583,792 கிரயமொன்றில் 2013 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்ட ஆராய்ச்சி செயற்திட்டம் 2017 திசெம்பரளவில் வெற்றிகரமாக பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்கு ரூபா 5,687,500 தொகையொன்றை ஆராய்ச்சி சபை செலவழித்திருந்தது. நேரடி மற்றும் மறைமுக தொழில் வாய்ப்புக்களினை உருவாக்க, ஏற்றுமதியினூடாக வருமானமொன்றை உழைப்பதற்கு எதிர்பாக்கப்பட்ட போதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 யூலை வரையிலும் வல்லப்பட்டை பயிர் பாகங்களின் ஏற்றுமதிக்கு வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திடமிருந்து தேவையான அங்கீகாரத்தினைப் பெறுவதற்கு தவறப்பட்டிருந்தது. ஆகையினால், செயற்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நோக்கங்களினை அடைவது சாத்தியமற்றதாகக் காணப்பட்டிருந்தது.

(எ) வவுனியா மாவட்டத்திலுள்ள தெரிவுசெய்யப்பட்ட கிராம சேவையாளர் பிரிவொன்றில் குடிநீர் மற்றும் வீட்டுக்குரிய நீரிலுள்ய ஃப்ளோரைடு மட்டம் (Fluoride level) மற்றும் செறிவினை குறைப்பதனூடாக சிறுநீரக தொற்றினை இழிவளவாக்குவதற்கான தாக்கத்தினை இனங்காண்பதற்கு தனியார் கம்பனியொன்றுடன் 2014 ஆம் ரூபா 20,218,000 மதிப்பிடப்பட்ட பெறுமதியொன்றுக்கு ஆராய்ச்சி செயற்திட்டமொன்றை ஆராய்ச்சி சபை ஆரம்பித்திருந்தது. நீர் சுத்திகரிப்பு நிலைப்படுத்தலொன்றினூடாக முழு கிராம சேவையாளர் பிரிவுக்கும் தாழ்ந்த ஃப்ளோரைடு மட்டம் மற்றும் செறிவுடன் நீரை விநியோகிப்பதனூடாக சிறுநீரக தொற்று நிலைமைகளினை தவிர்க்கும் மற்றும் இழிந்தளவாக்கும் திறமைவாய்ந்த விஞ்ஞானரீதியான பரீட்சிப்பினை உள்ளடக்கியிருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(i) முழுச்செயற்திட்டத்திற்குமான ஆராய்ச்சி சபையின் பங்களிப்பாகக் காணப்பட்ட ரூபா 10,109,000 தொகையொன்றில் ரூபா 2,403,925 அல்லது 24 சதவீதம் ஏற்பட்டதன் மூலம் 2014 ஆகஸ்ட் மாதத்தில் நீர் தூய்மையாக்கியொன்று கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும், உபகரணத்தை கொள்வனவு செய்வதற்கு முன்னர் இந்த உபகரணத்தை அமைப்பதற்கான இடமொன்றை முறையாக இனங்கண்டிருக்கவில்லை. 2014 ஆகஸ்ட் மாதத்தில் தனியார் காணியொன்றில், உரிமையாளரின் அனுமதியுடன் காணியில் அது அமைக்கப்பட்ட போதிலும், காணி உரிமையாளர் அவரின்

காணியினை கோரியிருந்தமை காரணமாக 2015 மே மாதத்தில் அந்த இடத்திலிருந்து அந்த தூய்மையாக்கி உபகரணம் அகற்றப்பட்டிருந்தது. அந்த விளைவாக, செயற்திட்ட நடவடிக்கைகளின் தொடர்ச்சிக்கு மாற்று இடங்களிலிருந்து நீர் தூய்மையாக்கி எடுக்கப்பட்டிருந்தது.

(ii) ரூபா 300,000 இற்கு மதிப்பிடப்பட்ட இந்த உபகரணம் 2018 மார்ச் மாதத்தில் ரூபா 78,000 விற்பனை செய்யப்பட்டிருந்தது. சாத்திய வள ஆய்வொன்றினை நடாத்தியதன் பின்னர் செயற்திட்டம் ஆரம்பிக்கப்படாமையின் விளைவொன்றாக, உபகரணத்தின் கொள்வனவு சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கலொன்றாக அவதானிக்கப்பட்டது. மேலும், செயற்திட்டதின் பிரதான நோக்கமொன்றாகக் காணப்பட்ட நீர் சுத்திகரிப்பு உபகரணமொன்றை நிறுவுவது நிறைவேற்ற முடியாதிருந்தது.

(iii) செயற்திட்ட உடன்படிக்கையின் பிரகாரம் 2017 ஆகஸ்ட் 11 இல் செயற்திட்டக் காலப்பகுதி முடிவடைந்திருந்ததுடன் செயற்திட்டம் தொடர்பிலான பகுப்பாய்வு அறிக்கையொன்று 03 மாதங்கள் கடப்பதற்கு முன்னர் ஆராய்ச்சி சபைக்கு கையளிக்க வேண்டியிருந்த போதிலும், கணக்காய்வுத் திகதியான 2018 யூலை வரையிலும் இறுதி செயற்திட்ட அறிக்கை சபைக்கு கையளிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 முகாமைத்துவ செயற்பாடுகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி சபையினால் ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கு ஏற்பாடுகளினை வழங்கும் போது ஆய்வுகளின் செயலாற்றலினை காலத்திற்கு காலம் பரீட்சிப்பதன் மூலம் ஏற்பாடுகளினை வழங்குவதற்குப் பதிலாக, ஆரம்பிப்பு நேரத்தில் ஒவ்வொரு செயற்திட்டத்தின் கீழ் ஆராய்ச்சிகள் தொடர்பிலான மொத்த ஏற்பாடு நடைமுறைக்கணக்கொன்றிக்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. 2013 தொடக்கம் 2017 வரையான காலப்பகுதியின் போது ஆரம்பிக்கப்பட்ட 155 செயற்திட்டங்கள் தொடர்பில் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்ட ரூபா 897,277,751 தொகையான மானியங்களில், மீளாய்வாண்டில் திசெம்பர் 31 இல் உள்ளவாறு நடைமுறைக் கணக்குகளில் ரூபா 522,205,060 தொகையொன்று விளைவற்றிருந்தது.

(ஆ) கணக்காய்வு திகதியான 2018 யூலை வரை சமர்ப்பிக்கப்பட்டிருந்த ரூபா 223,136,633 மானியப் பெறுமதியுடைய 2008 தொடக்கம் வரையான 2017 காலப்பகுதியின் போது பூர்த்தியடைந்து காணப்பட்ட 55 ஆராய்ச்சி செயற்திட்டங்களின் இறுதி அறிக்கைகளிலிருந்து 42 மாதங்கள் தொடக்கம் 06 மாதங்கள் கடந்திருந்த போதிலும், ஆராய்ச்சி செயற்திட்டங்களின் மதிப்பீடுகள் நடாத்தப்பட்டிருக்கவில்லை. அவ்வாறான மதிப்பீடுகளில் தாமதங்கள் காரணமாக, ஆய்வுகளின் முக்கியமான நடைமுறை ரீதியான விளைவுகளினை இழிவுபடுத்த முடியுமாகவிருந்தது.

## 5. நிலைபேறான அபிவிருத்தி

### 5.1 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகளின் அடைந்து கொள்ளல்

நிலைபேறான அபிவிருத்திக்கான 2030 ஆம் ஆண்டுக்கான ஐக்கிய நாடுகள் நிலைபேறான "நிகழ்ச்சிநிரலின்" பிரகாரம் ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டியிருந்ததுடன், மீளாய்வாண்டு தொடர்பில் அவர்களின் பரப்பெல்லை வரம்பின் கீழ் காணப்படும் செயற்பாடுகள் தொடர்பில் எவ்வாறு நடவடிக்கைகளினை எடுக்கவேண்டுமென இலங்கை தேசிய ஆராய்ச்சி சபை அறிந்திருந்தது. இது தொடர்பில் பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) பரப்பெல்லையின் பிரகாரம் அடைந்துகொள்ள வேண்டிக் காணப்பட்ட நோக்கங்களாகக் காணப்பட்ட நிலைபேறான கமத்தொழிலின் மேம்படுத்துதல், ஆரோக்கியத்தின் மேம்படுத்தல் மற்றும் எல்லா வயதிலும் நல்வாழ்வு, நிலைபேறான கைத்தொழில்மயமாக்கலின் மேம்படுத்தல், நிலைபேறான நுகர்வு மற்றும் உற்பத்தியின் உறுதிப்படுத்தல் மற்றும் கடல்சார் வளங்களின் நிலைபேறான பயன்பாடு போன்ற நோக்கங்கள் தேசிய ஆராய்ச்சி சபையினால் இனங்காணப்பட்டிருந்தது.

கண்டுபிடிப்புக்களினை ஊக்கப்படுத்தல் மற்றும் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளவர்களின் எண்ணிக்கையை அதிகரித்தல் மற்றும் பொது மற்றும் தனியார் துறைகளில் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்திக்கான செலவினத்தை அதிகரித்தல் போன்றவை பிரதான இலக்குகள் என இனங்காண முடியுமாக இருந்த போதிலும் இந்த நோக்கங்களில் நிலைபேறான கைத்தொழில்மயமாக்கலொன்றினை மேம்படுத்தும் நோக்கம் ஆராய்ச்சி சபையின் பரப்புடன் நேரடியாகத் தொடர்புபடுகின்றதிலிருந்த ஒரு மில்லியன் சனத்தொகைக்கு கிடைக்கக்கூடிய

ஆராய்ச்சியாளர்களின் எண்ணிக்கை, பொது - தனியார் கூட்டு ஆராய்ச்சி செயற்திட்டத்தின் சதவீதம், வருடாந்தம் உருவாகும் கண்டுபிடிப்புக்களின் எண்ணிக்கை மற்றும் வணிகமயமாக்கப்பட்டவற்றின் எண்ணிக்கை, பெறப்பட்ட காப்புரிமைகளின் எண்ணிக்கை, நடாத்தப்பட்ட தேசிய மற்றும் சர்வதேச வெளிப்பீடுகளின் எண்ணிக்கை மற்றும் இந்த இலக்குகளின் அடிப்படையில் அடைவுகளின் அளவிடைகளுக்கான குறிகாட்டிகளாக ஆய்வுகளினூடாக பிரயோகிக்கப்பட்ட பரிகாரங்களாக அங்கு தேசிய ரீதியாக காணப்பட்ட பிரச்சினைகளின் எண்ணிக்கை போன்றவை இனங்காணப்பட்டிருக்கவில்லை.

(ஆ) ஆராய்ச்சி சபை அதன் பரப்பெல்லையுடன் சம்பந்தப்பட்ட குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளினை இனங்கண்டிருந்த போதிலும், அதனுடன் தொடர்புடைய குறிகாட்டிகள் தெளிவாக இனங்காணப்பட்டிருக்கவில்லை. "நிலைபேறான கைத்தொழில்மயமாக்கலினை மேம்படுத்தல்" நோக்கம் தொடர்பில் இனங்காணப்பட்ட குறிகாட்டி ஒவ்வொரு துறையினால் வழங்கப்பட்ட மானியங்கள் அல்லது சதவீதத்தின் பெறுமதியாகக் காணப்பட்டது. தேசிய தேவைகள் தொடர்பில் அரச மானியங்களின் அதிஉத்தம பயன்பாட்டினை உறுதிப்படுத்தும் அதேவேளை, இலக்குகளினை அடைந்துகொள்ளும் செயலாற்றலினை அளவிடுதவதற்கான இறுதி குறிக்காட்டியாக அது துல்லியமானதாக காணப்பட்ட போதிலும், துறைகளில் இனங்காணப்பட்ட தற்போதுள்ள பிரச்சினைகளினை இனங்காண்பதற்கு, பிரதானமாக தீர்வுகள் தேவைப்படுகின்ற பிரச்சினைகள் எதுவென துல்லியமாக கண்டறிய மற்றும் சுகாதார அமைச்சு, கமத்தொழில் அமைச்சு மற்றும் தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரவியல் திணைக்களம் போன்ற அமைப்புக்களுடன் இணைந்து அதற்கான ஒவ்வொரு துறைகள் தொடர்பில் முக்கிய குறிபாட்டிகளினை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) மேலே குறிப்பிடப்பட்ட நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளுக்கு மேலதிகமாக, தேசிய தேவைகளுக்கு பங்களிப்புச்செய்யும் ஆராய்ச்சி தளமொன்றை அபிவிருத்தி செய்வது ஆராய்ச்சி சபையின் பிரதான நோக்கமொன்றாகக் காணப்பட்டதிலிருந்து, "அனைவருக்கும் நீர் மற்றும் கழிவகற்றல் வசதிகளினைப் பெற்றுக்கொடுத்தல் மற்றும் அவற்றின் நிலைபேறான முகாமைத்துவத்தினை உறுதிப்படுத்தலுக்கான" மறைமுகமான பங்களிப்பின் இயலுமை இனங்காணப்பட்டிருக்கவில்லை. ஆகையினால், அதனுடன் தொடர்புடைய இலக்குகள், இலக்குகளினை அடையக்கூடியதாகக் காணப்படும் மைல்கல்கள் அடிப்படை தரவுகள் அத்துடன் செயலாற்றலினை

அளவிடுதவற்காக காணப்படும் குறிகாட்டிகள் என்பவற்றை இனங்காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) ஏதேனும் செயற்பாட்டின் சரியான செயலாற்றிலினை (குறிகாட்டிகளின் அடிப்படையில்) அளவிடுவதற்கு துல்லியமான தரவுத்தளமொன்றை வைத்திருப்பது இன்றியமையாததாகக் காணப்படுகின்றது எனினும், நிதிசார் ஏற்பாடுகளினை மேற்கொள்ளல், நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளின் அடைவுகளினை அளவிடுதவற்கான துல்லியமான தரவுத்தளமொன்றை உருவாக்க போதுமான பௌதீக வசதிகளினை பூர்த்திசெய்தல் மற்றும் பயிற்றுவிக்கப்பட்ட ஊழியரொருவரினை தீர்மானித்தல் போன்ற உண்மைகள் தொடர்பில் சபை கவனஞ்செலுத்தியிருக்கவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 பெறுகை மற்றும் ஒப்பந்த நடைமுறை

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஆராய்ச்சி செயற்திட்டங்களின் வினைத்திறமை மற்றும் எதிர்பார்க்கப்பட்ட காலப்பகுதியின் போது பூர்த்தியினை உறுதிப்படுத்துவதற்கான உபகரணங்களின் கொள்வனவினை மேற்கொள்வதற்கு திட்டமொன்று தயாரிக்கப்பட்டதிலிருந்து, பெறுகை வகை, பெறுகை முறைமை, விலைமனு ஆவணங்களின் தயாரிப்பு மற்றும் அங்கீகாரத்திற்கு தேவையான காலம், விலைமனுக்களினை அழைப்பதற்கு தேவையான காலம், தொழில்நுட்பக்குழுவின் மதிப்பீடுகள், ஆராய்ச்சி செயற்திட்ட முன்மொழிவுகளினைப் பெற்றுக்கொள்ளும் போது பெறுகைக் குழுவின் அங்கீகாரத்திற்கு தேவையான காலப்பகுதி போன்ற பெறுகை நடைமுறையொன்றின் அடிப்படை மூலக்கூறுகளினை உள்ளடக்கி ஆய்வாளரிடமிருந்த பெறுகைத் திட்டமொன்று / கால சட்டகமொன்று பெறவேண்டியிருந்த போதிலும், அந்த வகையில் செயற்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2014 ஆம் ஆண்டிலிருந்து 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியின் போது அந்தக் கொள்வனவுகளுக்குச் செய்யப்பட்டிருந்த மானியங்களின் வழங்குகைகளிலிருந்து 52 ஆராய்ச்சி செயற்திட்டங்களுக்கு மீளாய்வாண்டின் போது ரூபா 73,461,671 தொகையான உபகரணம் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன், பெறுகை முறையாக திட்டமிடப்பட்டிருந்தால்,

தாமதமின்றி கொள்வனவு செய்வதற்கு சாத்தியக்கூறொன்று காணப்பட்டிருக்கும் என அவதானிக்கப்பட்டது.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுக் குறைபாடுகள் அவ்வப்போது சபைத் தலைவரின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டன. பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பில் விசேட கவனம் கோரப்படுகின்றது.

| முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்புக்கள் | அவதானிப்புக்கள் |
|---|---|
| (அ) ஆராய்ச்சி செயற்திட்டங்களின் முகாமைத்துவம் | (i) உரிய நேரத்தில் செயலாற்றல் அறிக்கைகளினைப் பெற்றுக்கொள்ளாமை மற்றும் மதிப்பீடுகளினை மேற்கொள்வதற்கு நீண்டகாலமொன்று எடுத்தமை. |
| | (ii) செயலாற்றல் அறிக்கைகள் தொடர்பில் மதிப்பீட்டினர்களின் கருத்துக்களினை ஆய்வாளர்கள் அறிந்திருக்க வேண்டிய போதிலும், அது தொடர்பில் உடனடியாக பதில்களினைப் பெற்றுக்கொள்வதற்கு முறைமையொன்று காணப்பட்டமை. |
| | (iii) ஆய்வாளரினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற ஆய்வு நிறுவகம் செயற்திட்டத்தின் மதிப்பீட்டில் ஈடுபடலாகாது. |
| | (iv) “இயக்க ஆராய்ச்சி செயற்திட்ட புலனாய்வின்” செயலாற்றலினை மதிப்பிடும் போது, ஆய்வாளர்களினால் வழங்கப்பட்ட செயலாற்றல் அறிக்கைகள் மாத்திரம் மதிப்பிடப்பட்டதுடன் பௌதிகரீதியாக பரீட்சிப்பதன் மூலம் செயலாற்றல் மீளாய்வு செய்யப்படவில்லை. |

| | | | |
|---|---|---|---|
| | | (v) | நிதிகள் வழங்கப்பட்ட உடனடியாக ஆராய்ச்சிகளின் ஆரம்பிப்பிற்காக பயன்படுத்தப்பட்டமையை உறுதிப்படுத்தும் முறைமையொன்று காணப்படாமை. |
| | | (vi) | ஆராய்ச்சி அல்லது ஆய்வாளர் தொடர்பில் மதிப்பீட்டாளர்களுக்கு எவ்வித தனிப்பட்ட ஆர்வமும் காணப்படாமையினால் கூற்றொன்றினைப் பெற்றுக்கொள்ளாமை. |
| (ஆ) | பெறுகைகள் முகாமைத்துவம் | (i) | இரகசியத்தன்மை, பாராபட்சமற்றதன்மை மற்றும் தனிப்பட்ட விருப்பமின்மைகள் தொடர்பில் பெறுகைகள் குழுக்கள் மற்றும் தொழில்நுட்ப மதிப்பாய்வுக் குழுக்களினால் கூற்றொன்று வெளிபடுத்தப்படாமை. |
| | | (ii) | விலைமனு திறக்கையில் விலைமனுதாரர்ககளின் வருகைக்கு பதிவேடொன்று பேணப்படாமை. |
| (இ) | நிலையான சொத்துக்கள் கட்டுப்பாடு | (i) | நிலையான சொத்துக்களின் கொள்வனவு தொடர்பில் பொருள் பெறுகைக் குறிப்பு வழங்கப்படாமை. |
| | | (ii) | கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்களினை நிலையான சொத்துக்கள் பதிவேட்டில் பதிவதில் தாமதங்கள் காணப்படுகின்றமை மற்றும் புத்தகங்களுக்குள் சில சொத்துக்களினைப் பதிவதற்கு தவிர்த்தல், வேண்டப்படும் அனைத்து தகவல்களினையும் உள்ளடக்காமை. |

| | | |
|---|---|---|
| | | (iii) பேரேட்டு கணக்குகளிலுள்ள பதிவுகள் மற்றும் நிலையான சொத்துக்கள் பதிவேடு இணக்கஞ்செய்யப்படாமை மற்றும் கண்கானிப்பு உத்தியோகத்தரொருவர் மூலம் மேற்பார்வை செய்யப்படாமை. |
| (ஈ) | சிறுசெலவுக் காசு மற்றும் செலவுக் கட்டுப்பாடு | அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தரொருவரினால் சிறுசெலவு காசு செலவினத்திற்கு அங்கீகரிக்கப்பட்ட பதிவேடுகள் காணப்படாமை. |

ஒப்பம்./எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

எச்.எம். காமினி விஜேசிங்ஹ
கணக்காய்வாளர் தலைமை அதிபதி